New Rubi Jewellers
நகைகளும்,
திருத்த வேலைகளும்
உங்கள்
தேவைகளுக்கு
உடனுக்குடன்
செய்து தரப்படும்
7, rue Cail 75010 Paris Tel: 01 42 05 18 05

ASI Boucherie
ஆடு, மாடு, கோழி
இறைச்சி வகைகளை
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
195, rue du Fbg st-denis, 75010 Paris
Tel: 01 42 05 23 78
M : La Chapelle
Gare du Nord

GB : Free France : 0,30 €

# ஈழமுரசு®

முரசு 03 21 - 27 பெப்ரவரி 2012 முழக்கம் 123

# மாலைதீவு நிலை ஏற்படுமா? அச்சத்தில் மகிந்த ராஜபக்ச!





## ஒரு தொலைகாட்சிப்பாடலும் உறைபனிக்குள்ளாக நடைபயணமும்









## போலி நம்பிக்கைகளின் இன்னுமொரு பக்கம்



## தமிழர் தாயகத்தை இராணுவ மயமாக்கும் முன்னாள் இராணுவத் தளபதியின் நகர்வுகள்!

## சவேந்திர சில்வா விலகலாம்? ஐ.நா. அமைதி காக்கும் பிரிவு அவசர சந்திப்பு

www.
பரிஸ்தமிழ்.
கொம்
www.paristamil.com

AUTOSUR
CONTROLE TECHNIQUE AUTOMOBILE
உங்கள் வாகனங்களை Controle Technique
செய்து கொள்ள நீங்கள்
நாட வேண்டிய இடம்
Le Bourget விமானநிலையம் முன்பாக
C.T.M
Autosur C.T.M
Mathavan Balakrishnan
24 Route de Flandres,
95500 Bonneuil En France
Tél.: 01 45 91 06 78 Fax: 01 45 91 05 96
Portable: 06 68 10 83 85

EURO RESTO SERVICE
உணவு விடுதிகளுக்கான உபகரணங்கள், மற்றும் உங்கள் இல்ல, மண்டப வைபவங்களுக்கான பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அனைத்து விதமான பிளாஸ்ரிக் பைகளும் மிகவும் மலிவாகவும் பெறலாம் கொள்ளலாம்
33 bis, rue du Chateau Landon, 75010 Paris
M° : STALINGRAD / LA CHAPELLE
Tél.: 01 40 36 00 09 / 06 68 67 15 55

தமிழ்க்கதிர்
தமிழ்தேசியத்தின் அனல்க் கதிர்
www.tamilkathir.com

VIJAY V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92

ARC PROTECTION
VIDEO SURVEILLANCE
AU SERVICE DE LA SECURITE
CAMERAS EN COULEUR
138, Avenue Henri Barbusse - 93700 Drancy
Tel 0033 9 50 40 84 52 - Fax 0033 9 67 03 63 69
Portable 0033 6 11 55 90 84
arceurope@hotmail.fr

BHARATH
51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20
Spécialitées Indianne et Srilankaise
www.restaurantbharath.com www.cafe-bharath.com

VG CASH & CARRY
மளிகை ஸ்தாபனம்
ஆசிய மற்றும் ஆபிரிக்க மளிகைப்பொருட்கள்.
Tél: 01 48 67 56 44
34, Avenue de la République
93150 Le Blanc Mesnil
(à côté la Poste)

VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04

மாதாந்தம் 300 MB இணையம் இலவசம்

Lycamobile
Appelez le monde pour moins cher

# 60 க்கும் மேற்பட்ட சர்வதேச நாடுகளுக்கான இலவச அழைப்புகள்..!

இணைப்புக் கட்டணம் இல்லை.!

0 ct/நிமிடம்*

இந்தியா
இலங்கை
மலேசியா
ஐரோப்பா
கனடா
அமெரிக்கா
சிங்கப்பூர்
குவைத்
சவூதி அரேபியா

*30€ வுக்கு மீள் நிரப்பும் பொழுது 600 நிமிடம் அல்லது குறுந்தகவல் (SMS) இலவசம்

| பிரான்ஸ் | வீட்டுத் தொலைபேசி | கைத் தொலைபேசி | உள்நாட்டு குறுந்தகவல் |
|---|---|---|---|
| | 0 Ct/நிமிடம்* | 12 Ct/நிமிடம் | 9 Ct/(SMS) |

லில் இருந்து

Lycamobile 0* Ct Lycamobile

*அனைத்து கட்டணங்களும் நிமிட கணக்கீட்டில் கணக்கிடப்படும். இலவச அழைப்புகள் பிரான்ஸிலிருந்து அல்யீரியா, சவூதி அரேபியா, பஹ்ரைன், வங்காளதேசம், கனடா, சீனா, கொலம்பியா, கோடே டிவோர், எகிப்து, அமெரிக்கா, ஐரோப்பா, பிரான்ஸ், ஹாங்கொங், இந்தியா, இந்தொனேசியா, ஈரான், ஈராக், ஜோர்டான், குவைத், லாவோஸ், லெபனான், மலேசியா, மொராக்கோ, மெக்சிகோ, நைஜீரியா, பாகிஸ்தான், போலாந்து, றொமேனியா, ரஸ்யா, சிங்கப்பூர், ஸ்ரீலங்கா, தாய்லாந்து, துருக்கி, வியட்நாம் வீட்டுத்தொலைபேசிக்கும் மற்றும் எல்லா நாடுகளிலுள்ள லைக்காமொபைல்களுக்கும் பொருந்தும். இச்சலுகை மீள்நிரப்பிய நாளிலிருந்து ஏழு நாட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். இலவச அழைப்புகளும், குறுந்தகவல் சேவையும் பாவனையோ, காலாவதியோ முடிந்தால் லைக்காமொபைலில் வழமையான கட்டணம் அறவிடப்படும். *சலுகை கட்டணங்கள் கால வரையறைக்குட்பட்டவை. Lycamobile SARL 47 boulevard de Courcelles, 75008 Paris; 528 332 505 RCS Paris.
ஒவ்வொரு சலுகையல்லாத அழைப்புக்களுக்கும் இணைப்புக்கட்டணமாக €0.09 அறவிடப்படும்.

01 77 72 23 22 www.lycamobile.fr

Lycamobile மீள் நிரப்பக்கூடிய இடங்கள்

Altadis SPF epay phoneo extenso RELAY PRESSE

ஈழமுரசு®

MAISON DES MEDIAS

முரசு 03 21 – 27 பெப்ரவரி 2012 முழக்கம் 123


"இலங்கையில் வழக்கில் உள்ள
அரசியல் அமைப்பு எப்போதுமே,
பெரும்பான்மையினரின்
ஆதிக்கத்தையே சிறு
பான்மையினர் மீது திணித்து
வந்திருக்கிறது."

- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்



# மாலைதீவு நிலை ஏற்படுமா? அச்சத்தில் மகிந்த ராஜபக்ச!

## மக்கள் போராட்டங்களை அடக்கக் கடும் உத்தரவு

(21.02.2012, செவ்வாய்க்கிழமை)
மாலைதீவில் சில வாரங்களாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள் மற்றும் சில காவல்துறை அதிகாரிகளின் கலகத்தையடுத்து அந்நாட்டு ஜனாதிபதி முஹமட் நஸீட் பதவி விலகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு, அவரது குடும்பமும் சிறீலங்காவில் தஞ்சமடைந்திருந்தது தெரிந்ததே. ஒரு நாட்டின் ஜனாதிபதி மக்கள் போராட்டம் மூலம் தூக்கியெறியும் நிகழ்வுகள் துனீசியா, எகிப்து, லிபியா எனத் தொடர்ந்து தற்போது மாலைதீவும் அந்த நிலைமைக்குள் வந்துவிட்டது.

சாதாரண மக்கள் போராட்டங்கள், ஆட்சியாளர்களை பதவியில் இருந்து விரட்டும் நடவடிக்கை மகிந்த ராஜபக்சவை அதிர்ச்சியடைய வைத்தபோதும், மாலைதீவு அதிபரின் அதிரடியான ஆட்சிப் பறிப்பே மகிந்தவை பெரும் அதிர்ச்சிக்கும், சிந்தனைக்கும் உள்ளாக்கியிருந்ததாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்நிலையில், தற்போது இலங்கையில் எழுச்சிபெற்றுவரும் எதிர்க்கட்சி, ஜே.வி.பி மற்றும் மக்கள் போராட்டங்கள் தனது ஆட்சிக்கு பேராபத்தாக மாறிவிடுமோ என்ற அச்சமும் இதற்கு சர்வதேச சக்திகள் துணை நிற்கும் என்ற மகிந்தவின் எதிர்பார்ப்பும் தற்போது போராட்டங்களை முளையிலேயே தடுத்து நிறுத்தும் நிலைக்கு கொண்டு சென்றுள்ளதாக தெரியவருகின்றது. இதனால் போராட்டங்கள் பெரிதாவதற்கு முன்பாகவே அவற்றை அடக்குவதற்காக காவல்துறையினரும்,

04ம் பக்கம் பார்க்க



17வது நாளாகத் தொடரும் நீதிக்கான பயணம் → 14


பரிசில் உங்கள் தேவைகளுக்கு உற்ற நண்பன்
ஈழமுரசுக்கு அருகாமையில்
Jorelle traduction
உங்கள் தேவை எங்கள் சேவை!
தமிழ், சிங்களம், ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு
மொழிபெயர்ப்புத் தேவைகள் அனைத்திற்கும் நாடுங்கள்
பிரான்சின் சட்டபூர்வமான அரசியற் தஞ்சக் கோரிக்கை விண்ணப்பங்கள் (OFPRA, CNDA (COMMISSION))
பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்கள், வாகனச் சாரதி அனுமதிப் பத்திரம்
மற்றும் உங்களது அனைத்து விதமான ஆவணங்களையும் சட்டரீதியான அரச அங்கீகாரம் பெற்ற (Assermentation)
அனுபவமிக்க மொழிபெயர்ப்பாளரால் தரமாகவும், விரைவாகவும் குறைந்த செலவில் மொழிபெயர்த்திடவும்
பதிவு திருமணங்களுக்கு நேரில் வந்து மொழிபெயர்ப்பு செய்து தரப்படும்
Tel. : 01 40 38 07 57 | 22 rue Perdonnet, 75010 Paris

R.S.T MULTISERVICES ஆர்.எஸ்.ரி பல்சேவை நிறுவனம்
வீடு விற்பதற்கு வாங்குவதற்கு
100 % தொடக்கம் 110 % வரை வீட்டுக்கடன்
• வீட்டுக்கு தேவையான வங்கிக் கடன்
• தனிப்பட்ட கடன் (Crédit Personnel)
ஆகியவற்றுக்கு நாடவேண்டிய நம்பிக்கையான நிறுவனம்
SERVICE FINANCIERE
உங்கள் சகல கடன்களையும் ஒருங்கிணைக்க எம்மை நாடுங்கள்.
RACHAT DE PRET
8 Bis, Rue de Verdun - 94190 Villeneuve Saint Georges
தொ- 01 45 99 22 76 தொ. நகல். 01 45 99 43 17
Email : Contact@avendreimmo.com Website : www.avendreimmo.com




ஈழமுரசு
Redacteur: K. Jeisanthar
Editor in chief: K. Jeisanthar
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்
அனைத்து தொடர்புகளுக்கும்:
MAISON DES MEDIAS
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE **Gratuit**
22, Rue Perdonnet,
75010 Paris, France
Tel: 00 33 1 40 05 95 15
Fax: 00 33 1 40 05 95 16
இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு:
E.Mail-eelamurazu@gmail.com
விளம்பர விநியோக தொடர்புகட்கு:
E.Mail-eelamurazuadm@gmail.com
Impression / Printing:
News Fax International
Unit 16, Bow Industraial Park
London E15 2DZ
பிரித்தானியா:
Eelamurasu Weekly
E.Mail-eelamurazu.uk@gmail.com
078 3087 4808
MOHAN
அவுஸ்திரேலியா:
P.O Box 1327
Glen Waverley
Victoria 3150
Tel: 61 3 8802 8368
Fax: 61 3 9803 4932
கனடா:
Pulathil Weekly
E.Mail-pulathilcanada@gmail.com
P.O.BOX # 4068, 1235 McCowan Rd,
Scarborough, ON, M1H 0A4
416 418 0822
சந்தா விபரம்
(அஞ்சற் செலவு மட்டும்)
வருட சந்தா
பிரான்ஸ் 60€
ஐரோப்பா 65€
ஏனைய நாடுகள் 70€
குறிப்பு:
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதிபெறவேண்டும்.

# மாலைதீவு நிலை ஏற்படுமா?

படையினரும் தென்னிலங்கையை நோக்கி நகர்த்தப்படுகின்றனர்.

இதேவேளை, மாலைதீவில் ஏற்பட்டுள்ள நிலையினை இலங்கையிலும் ஏற்படுத்த மேற்குலகம் சதி செய்து வருவதாக சிறீலங்காவின் மின்சக்தி எரிசக்தி அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளருமான சம்பிக்க ரணவக்க குற்றம் சாட்டியுள்ளார். இலங்கையிலும் மாலைதீவின் நிலையினை ஏற்படுத்திவிடலாம் என மேற்குலகம் நினைக்கின்றது. இது ஒரு போதும் நடைபெறாது. இது மேற்குலகின் பகற்கனவாகவே இருக்க முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், விலைவாசி உயர்வு, எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பொதுமக்கள் மீதான அரசின் அடக்குமுறையை ஆட்சேபித்தும் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் பல எதிரணிக் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து கடந்த வெள்ளிக்கிழமை மாலை கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்துக்கு முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி மிகவும் கொடூரமாக


படுகாயமடைந்த ஜயலத் ஜயவர்த்தனா

அடக்கப்பட்டுள்ளது. பல ஆயிரக் கணக்கானோர் கூடியிருந்தபோதும் அமைதியாக நடைபெற்ற பேரணியைக் கலைப்பதற்கு காவல்துறையினர் கண்ணீர்ப் புகை, நீர்ப்பாய்ச்சிகளைப் பிரயோகித்ததோடு ஊர்வலத்தில் ஈடுபட்டோர் மீது குண்டாந்தடி பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

தாக்குதல் நடைபெற்றபோது ஆர்ப்பாட்டப் பேரணியில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன், நவசமசமாஜக் கட்சி பொதுச்செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன, நவசிஹல உறுமயக் கட்சித் தலைவர் சரத் மனமேந்திர, ஐ.தே.க. செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க உட்பட கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கொழும்பு மாநகர முதல்வர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் ஐ.தே.க. மாநகர சபை உறுப்பினர்களும் மாகாண மற்றும் உள்ளூராட்சிச் சபைகளின் உறுப்பினர்கள் தமது ஆதரவாளர்களுடன் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது காவல்துறையினரின் தாக்குதலில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன தலையில் படுகாயமடைந்த நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார். காவல்துறையினரால் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டது கண்ணீர்புகையா என தனக்கு சந்தேகம் நிலவுவதாக ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எரிபொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்து சிலாபம் மீனவர்கள் தொடர்ச்சியாக மீன்பிடி நடவடிக்கைகளை புறக்கணித்து வருகின்றனர். எரிபொருட்களுக்கான விலை ஏற்றத்தை கண்டித்து சிலாபம் மக்கள் கடந்த வாரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது மீனவர் ஒருவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது இறுதிக்கிரியைகளில் மகிந்தவிற்கு எதிரான கோசங்களுடன் பெருமளவு மக்கள் கலந்துகொள்ளலாம் என்பதால், இறுதி ஊர்வலத்தின் போது ஆர்ப்பாட்டங்கள் எவையும் மேற்கொள்ளக் கூடாது என சிலாபம் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. அத்துடன், சிலாபம் நகரில் காவல்துறையினரும், இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு என்றுமில்லாதவாறு பலப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், தற்போது மகிந்த அரசுக்கு எதிரான போராட்டங்கள் பல்வேறு பகுதிகளுக்கும் பரவி வருவதாகத் தெரியவருகின்றது.

இதுஇவ்வாறிருக்க, கடந்த காலங்களில் தமிழர்களை அழிப்பதற்காக பெரும் தொகையான அழிவு குண்டுகளை வாங்கிக்குவித்த மகிந்த அரசு தற்போது சிங்கள மக்களின் போராட்டங்களை ஒடுக்க கண்ணீர்புகைக் குண்டுகளை வாங்கிக் குவிக்குமாறு பணித்துள்ளதாக தெரியவருகின்றது.

ஒரு தொகுதி கண்ணீர்ப்புகைக் குண்டுகளை சிறீலங்காக் காவற்துறையினர் கொள்வனவு செய்யவுள்ளதாக காவற்துறை ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்திருக்கின்றார். ஒவ்வொரு ஆண்டின்


காவல்துறையினருடன் மோதல்

தொடக்கத்தில் காவற்துறையினருக்கு தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. அவ் வகையிலேயே கண்ணீர்ப் புகைக் குண்டுகள் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார். அண்மைக் காலமாக நாட்டில் ஏற்பட்ட கலவரங்களைக் கட்டுப்படுத்த, அதிகளவான கண்ணீர்ப் புகைக்குண்டுகள் காவற்றுறையினரால் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். எனினும், அதிகரிக்கப்போகும் மக்கள் போராட்டங்களை தடுப்பதற்காகவே கண்ணீர் புகைக்குண்டுகள் அவசரமாக அதிகளவில் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

எனினும், வாழ முடியாத சூழ்நிலையில் இருக்கும் மக்கள் எழுச்சி பெறுவதை கண்ணீர்புகைத் தாக்குதல் நடத்தி தடுக்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எச்சரித்துள்ளார்.

Tamil Speaking Call: 0203 384 7535
Email Us: info@airchoice.co.uk
Website: www.airchoice.co.uk
For Emergency Flights - Call & Select Option 3in!
AirChoice.co.uk
IATA
COLOMBO from £220*
FLIGHTS WORLDWIDE+Taxes
ETIHAD AIRWAYS fr £166*
SriLankan Airlines fr £300*
INDIAfr fr £155*
OMAN AIR fr £220*
JET AIRWAYS fr £130*
MALAYSIAfr fr £150*
KUWAIT AIRWAYS fr £220*
QATAR AIRWAYS fr £285*
CANADAfr fr £130*
Gulf Air fr £166*
Emirates fr £405*
* Subject to availability, Terms & Conditions apply. Exclude taxes *

GARE DE LYON இல் இருந்து 05.03.2012
காலை: 8H11
விபரம் 15ம் பக்கம்

ஈழமுரசு

# மகிந்தவின் ஏமாற்று நாடகங்கள் எதுவரை?

சர்வதேசத்தை ஏமாற்ற காலத்திற்கு காலம் பல்வேறு குழுக்களை அமைத்துவரும் சிறீலங்காவின் புதிய அவதாராகமாக பிறப்பெடுத்துள்ளது 'இராணுவ நீதிமன்றம்'. போர் நிறைவடைந்ததன் பின்னர் சர்வதேச அழுத்தங்கள் எழுந்தபோது நல்லிணக்க மற்றும் கற்றுக்கொண்ட ஆணைக்குழு ஒன்றை மகிந்த அமைத்து காலத்தை ஓட்டிவந்தார்.

தங்களது நிபுணர் குழுவின் அறிக்கையைக்கூடக் கிடப்பில் போட்டுவிட்டு, மகிந்தவின் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை எதிர்பார்த்து இலவுகாத்த கிளியாகக் காத்துக்கிடந்தது ஐ.நா. ஆனாலும் மகிந்த காலத்தை இழுத்தடிப்பதைப் புரிந்துகொண்ட, மனித உரிமை அமைப்புக்களும், மேற்குலக நாடுகளும் உடனடியாக அறிக்கையை வெளியிடவேண்டும் என்று அழுத்தம் போட்டன. வேறுவழியின்றி மகிந்தவும் அறிக்கையை வெளியிட்டுவைத்தார்.

மகிந்தவின் நல்லிணக்கத்தின் ஊடாக பொன் முட்டை கிடைக்கும் என்று எதிர்பார்த்தவர்களுக்கு வெறும் கூழ் முட்டையே கிடைத்தனால் வெறுத்துப்போனார்கள்.

சர்வதேசத்தின் முகச்சுழிப்பைச் சமாளிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நாடகத்தை அரங்கேற்றினார் மகிந்த. வெட்டித்தனமான பேச்சு என்பதை காலம் கடந்து உணர்ந்துகொண்டு விலகிக் கொண்டது கூட்டமைப்பு. அடுத்து நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைத்து காலத்தை இழுத்தடிக்க மகிந்த முயன்றார். நாடாளுமன்றத் தெரிவிக்குழுவிற்குள் கூட்டமைப்பும் இருந்ததால்தான் சர்வதேசத்தை ஏமாற்றுவது சுலபம் என்று நம்பிய மகிந்த, கூட்டமைப்பை இழுக்க பல வலைகளையும் வீசினார். மகிந்தவின் வலைக்குள் விழப்போன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சிலரையும் தடுத்து நிறுத்தி காப்பாற்றிவிட்டனர் தமிழர்கள். கூட்டமைப்பு விழுந்தால்தான் தாங்களும் விழுவோம் என்றது எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி. இதனால் நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்ற நாடகம் அரங்கேறாமலேயே அடங்கிப்போனது.

இந்த நிலையில்தான் ஜெனீவாவில் மனித உரிமைகள் மாநாடு ஆரம்பமாகின்றது. இந்த மாநாட்டிற்கு முன்பாக சர்வதேசம் நம்பும் வகையில் எதாவது விசாரணைக்குழுவை அமைப்பதற்கு மகிந்த எடுத்த முயற்சிகள் எவையும் கைகூடவில்லை. இதற்குள் அமெரிக்கா வேறு தனது பிரிதிநிதிகளை இலங்கைக்கு அனுப்பி மகிந்தவை அச்சுறுத்திக்கொண்டிருந்தது. போருக்கு உதவினால் தமிழர்களுக்கு தீர்வு வழங்குவேன் என்ற மகிந்த, போர் முடிவடைந்து ஆண்டுகள் மூன்றாகின்ற நிலையிலும் தீர்வொன்றையும் வழங்காது காலத்தை இழுத்தடிப்பதை சர்வதேசம் விரும்பவில்லை என்பதை இலங்கைக்குப் படையெடுக்கும் இராஜதந்திரிகளின் கருத்துக்கள் உறுதிப்படுத்துகின்றன. இந்த நிலையில்தான் தற்போது மகிந்தவின் இராணுவ நீதிமன்றம் தோற்றம்கொண்டுள்ளது.

2010ம் ஆண்டு நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டில் அதில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளில் (ஆசியா 13, ஆபிரிக்கா 13, தென் அமெரிக்கா 8, ஐரோப்பா 13 அங்கத்துவங்களைக் கொண்டுள்ளன) 27 நாடுகளின் ஆதரவைப் பெற்று மகிந்த அரசு தப்பித்துக்கொண்டது. 2011ம் ஆண்டும் தனக்கெதிராக எவ்விதப் பிரேரணையும் கொண்டுவரப்படாமல் இருப்பதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வெற்றியும் பெற்றது. ஆனால் இம்முறை அது சாத்தியமாகாது என்பதை மகிந்த புரிந்துகொண்டுள்ளபோதும், தன்னைப் பாதுகாப்பதற்கு கடும் பிரயத்தனங்களை எடுத்துள்ளார்.

ஆனால், இம்முறை மகிந்தவிற்கு சாதகமாக இருக்காது என்பதே அமெரிக்கா முதல் ஐரோப்பா வரை ஒலிக்கின்ற குரல்கள் உறுதிப்படுத்துகின்றன. மகிந்தவின் சர்வதேசத்தை ஏமாற்றும் நாடகம் ஒரு முடிவு கட்டத்தை நெருக்கிக்கொண்டிருக்கின்றது என்றே நம்பலாம்.

மகிந்தவின் சிந்தனை இப்போது சிங்களத்தின் நிந்தனையாக மாறிக் கொண்டிருக்கின்றது. மகிந்தவைத் துட்டகைமுனுவாகத் தூக்கிவைத்திருந்தவர்கள் இப்போது மகிந்தவிற்கு எதிராக போராடவும் தயாராகிவிட்டார்கள். சர்வதேசத்தின் அழுத்தம் ஒருபுறம், தனது மக்களின் போராட்டம் மறுபுறம் என இரு பக்கங்களாலும் அடிவாங்கத் தொடங்கியுள்ளார் மகிந்த.

சிங்கள தேசத்தின் மீது சர்வதேசம் கொடுக்கப்போகும் அழுத்தங்களையும், மகிந்த ஆட்சியின் மீது சிங்கள தேசம் ஏற்படுத்தப்போகும் அதிர்வுகளையும் தமிழர் தலைமைகள் தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ளவேண்டும். அதற்கேற்ற வகையில் தமிழ் மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கான காய்களை நகர்த்தவேண்டும். மிகவும் நெருக்கடியான ஒரு சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கு சார்பாக கனிந்துவரும் இந்தக் காலத்தைத் தவறவிட்டால், இன்னொரு வாய்ப்புக்காக மீண்டும் நீண்டகாலம் காத்திருப்பது தவிர்க்கமுடியாமல் போய்விடும்.

## சவேந்திர சில்வா விவகாரம்

# ஐ.நா. அமைதி காக்கும் பிரிவு அவசர சந்திப்பு

## ஊடகவியலாளர் மீது சீற்றம்

ஐ.நா. அமைதி காக்கும் நடவடிக்கைகள் தொடர்பான விசேட குழுவின் சிரேஷ்ட ஆலோசகராக தமிழினப் படுகொலையில் ஈடுபட்டவரும், சிறீலங்காவின் முன்னாள் இராணுவத் தளபதியுமான போர்க் குற்றவாளியாகக் கருதப்படும் ஜெனரல் சவேந்திர சில்வாவை நியமித்தது ஐ.நாவிற்கு கடும் நெருக்கடிகளை ஏற்படுத்திவருகின்றது.

முன்னதாக இந்த மாத முற்பகுதியில் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக இனப்படுகொலையில் பாதிக்கப்பட்டோரின் உறவினர்கள் அமெரிக்காவில் தொடுத்திருந்த வழக்கில், விசாரணையை மேற்கொண்ட நீதிமன்றம் சவேந்திர சில்வா ஐ.நா.வில் கொழும்பின் பிரதித் தூதுவர் என்ற ரீதியில் அவர் இராஜதந்திர சிறப்பு விடுபாட்டை கொண்டிருப்பதாக தெரிவித்து அவருக்கு எதிரான மனுவை நிராகரித்திருந்தது.

எனினும், போர்க்குற்றம் சாட்டப்பட்டுள்ள சவீந்திர சில்வா, ஐ.நா பொதுச்செயலருக்கு அமைதிப்







படை நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனை வழங்கும் சிறப்புக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்ட விவகாரம் பெரும் பூதாகரமாகியுள்ளது. இந்த விவகாரம் குறித்து நியூயோர்க்கில் உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்றும் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றுள்ளது.

சவேந்திர சில்வாவிற்கு ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடிக்கு இன்னர் சிற்றி பிரஸ் ஊடகமே முக்கிய காரணமாக இருக்கின்றது. போர்க் குற்றச்சாட்டப்பட்டுள்ள சவேந்திர சில்வாவை எவ்வாறு ஐ.நா. ஏற்றுக்கொள்ள முடியும் என்பது குறித்து ஐ.நா.வையும் அதன் பின்னர் அங்குள்ள அமெரிக்கத் தூதரகத்தையும் மூன்று வாரங்களுக்கு முன்னர் இன்னர் சிற்றி பிரஸ் கேட்க ஆரம்பித்தது.

ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வுகள் ஆரம்பமாக உள்ள நிலையில், தனக்கு முழு அளவில் அவமதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் குறிப்பிட்டதொரு வெளிநாட்டு ஊடகவியலாளர் ஈடுபட்டிருப்பதாக சவேந்திர சில்வா குற்றம்சாட்டிக் கொண்டிருந்தார். இலங்கைக்கெதிராக குறிப்பிட்ட ஓர் ஊடகவியலாளர் எப்போதுமே தரக்குறைவான நோக்கத்துடன் செயற்பட்டு வருவதாக சவேந்திர சில்வா அரச வானொலிக்குத் தெரிவித்ததாக சன்டே லீடர் இணையத்தளம் குறிப்பிட்டிருக்கிறது. அந்த ஊடகவியலாளர் இப்போது ஆதரமற்ற போர்க்குற்றச்சாட்டுகள் மூலம் உள்ளூர் மற்றும் சர்வதேச சமூகத்தின் முன்னால் தனக்கு அவமதிப்பை ஏற்படுத்த முயற்சிப்பதாக அவர் கூறியுள்ளார். அந்த ஊடகவியலாளர்களின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஆயினும் நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. விவகாரங்கள் குறித்து செய்தி சேகரிக்கும் நிருபரே அவர் என நம்பப்படுகிறது. அது இன்னர் சிற்றி பிரஸ் ஊடகவியலாளராகவே இருக்கக்கூடும் எனவும் நம்பப்படுகின்றது.

இந்நிலையில், இலங்கை தொடர்பான ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்திருந்த நிபுணர்குழுவின் அறிக்கையில் போர்க்குற்றத்துடன் சம்பந்தப்பட்டதாக சவேந்திர சில்வாவின் 58வது படையணி திரும்பத் திரும்ப பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. தனக்கும் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இதனை ஏற்பாடு செய்யுமாறு கூறப்பட்டிருந்ததாக இன்னர் சிற்றி பிரஸுக்கு பங்களாதேஷின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பெப்ரவரி 14ல் கூறியிருந்தார். பெப்ரவரி 16ல் பாகிஸ்தானின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி இதனை உறுதிப்படுத்தியிருந்தார். இது தொடர்பாக பெப்ரவரி 17ல் (கடந்த வெள்ளிக்கிழமை) சந்திப்பொன்று இடம்பெறவிருப்பதாக அவர் தெரிவித்திருந்தார். இந்த சந்திப்பு ஐ.நா.வின் அமைதி காக்கும் பணிக்கான இரு உதவி செயலாளர் நாயகங்களுடன் இடம்பெற்றது. வெள்ளிக்கிழமை காலை 9.45 மணியளவில் இந்த சந்திப்பு இடம்பெற்றதாக இன்னர் சிற்றி பிரஸ் தெரிவித்துள்ளது.

வெள்ளிக்கிழமை 10.30 மணியளவில் கடிதம் ஒன்று பற்றி அமெரிக்கத் தூதுர் சூசன் ரைஸிடம் இன்னர் சிற்றி பிரஸ் கேட்டது. ஐ.நா. விற்கான அமெரிக்க தூதகரத்தின் ஆலோசகர் ரஸல் எவ்கிரகாம் ஐ.நா.வுக்கு எழுதிய கடிதம் தொடர்பாகவே இன்னர் சிற்றி பிரஸ் கேட்டிருந்தது. சிறீலங்காவின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதியான சவேந்திர சில்வா இராஜதந்திர சிறப்பு விடுபாட்டைக் கொண்டிருப்பதாகவும் அதன் அடிப்படையில் சில்வாவுக்கெதிரான இந்த வழக்கு நிராகரிக்கப்பட்டிருந்தது எனவும் அமெரிக்க சமஷ்டி நீதிமன்றம் ஒன்று தெரிவித்திருந்த விடயத்தை சில்வாவின் வழக்கறிஞர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்தை 'இன்னர் சிற்றி பிரஸ்' தனது இணையத்தளத்தில் வெளியிட்டிருக்கிறது.

சூடான் தொடர்பாக இன்னர் சிற்றி பிரஸின் கேள்விகள் சிலவற்றை தூதுவர் ரைஸ் எடுத்துக் கொண்டார். 'இவை இரு வேறுபட்ட விடயங்கள், இராஜாங்கத் திணைக்களம் சிறப்பு விடுபாட்டிற்கு பதிலளிக்க வேண்டியுள்ளது. அவர் துரதிர்ஷ்ட வசமாகவோ அல்லாது அதிர்ஷ்டவசமாகவோ இராஜதந்திர அந்தஸ்தைக் கொண்டிருக்கிறார்' என்று இன்னர் சிற்றி பிரஸுக்குக் கூறினார். அதன் பின்னர்

(18ம் பக்கம் பார்க்க)

## சனல்-4ன் மற்றுமொரு புதிய ஆவணப்படம்

சிறீலங்காவுக்கு எதிராக மற்றுமொரு ஆவணப்படம் ஒன்றை சனல்-4 தொலைக்காட்சி வெளியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வன்னி இறுதிக் கட்ட யுத்தத்தின்போது தமிழ் மக்கள் மீது சிறீலங்காப் படையினர் அட்டூழியம் புரிந்ததையும் போர்விதிகளை மீறியதையும் காட்சிகளாக உள்ளடக்கி, பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட சனல்-4 தொலைக்காட்சி 'சிறீலங்காவின் கொலைக்களம்' என்ற தலைப்பிலான ஆவணப்படம் ஒன்றை முன்பு வெளியிட்டது. குறித்த ஆவணப்படம் சிறீலங்கா அரசின் விமர்சனங்களுக்கு உள்ளானதுடன் கலக்கத்திற்கும் ஆளாக்கியிருந்தது. அத்துடன் சிறீலங்கா அரசாங்கத்திற்கு எதிரான சர்வதேச அழுத்தத்தை அதிகரிக்கச் செய்தது. இந்நிலையில் அதுபோன்றதொரு ஆவணப்படத்தை சனல்-4 வெளியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளுக்கு முன்னதாக இந்த ஆவண்பபடம் வெளியிடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. முன்னதாக வெளியிடப்பட்ட கொலைக்களம் ஆவணப்படத்தை தொகுத்து வழங்கிய ஜோன் ஸ்னோவ் இப் புதிய ஆவணப்படத்தையும் வெளியிட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தனியார் பேருந்து மோதி குடும்பஸ்தர் பலி

வீதியால் சென்ற தனியார் பேருந்து (மினிபஸ்) எதிரே வந்த குடும்பஸ்தர் மீது மோதியதில் சம்பவ இடத்திலேயே அக் குடும்பஸ்தர் உயிரிழந்தள்ளார். இச் சம்பவம் கடந்த 18ம் திகதி சனிக்கிழமை மாதகல் கடற்கரை வீதியில் இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து மாதகலுக்கான தனது போக்குவரத்தினை நிறைவு செய்து விட்டு அடுத்த பணிக்காக காத்திருந்த பேருந்து ஒன்றினை வேறிடத்திற்கு கொண்டு செல்ல முற்பட்டுள்ளார், பிறிதொரு பேருந்தின் நடத்துநர். அச்சமயம், மாதகல் கடற்கரை அன்னை ஆலயத்திலிருந்து தனது வீடு நோக்கி வந்துகொண்டிருந்த குடும்பஸ்தரை மோதியதில் அவர் தூக்கி வீசப்பட்டுத் தலையில் காயமடைந்த நிலையில் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மாதகலைச் சேர்ந்த விக்ரர் பொனிபஸ் என்ற 40 வயது குடும்பஸ்தரே மேற்படி உயிரிழந்தவராவார். சம்பவ இடத்துக்கு விரைந்த இளவாலையில் நிலைகொண்டுள்ள சிறீலங்காக் காவற்றுறையினர் நடத்துநரைக் கைது செய்ததுடன், இறந்தவரின் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர்.

## வடமராட்சியில் சிசுவின் உடலம் மீட்பு

யாழ் வடமராட்சிபகுதியில் பிறந்து ஒரு நாளான ஆண் சிசுவின் உடலம் கடந்த வாரம் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வடமராட்சி பகுதியில் வீட்டின் பின்புறத்தில் குழியினுள் புதைக்கப்பட்டிருந்த உடலம் காவல்துறையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மீட்கப்பட்டுள்ளது. மேற்படி சிசுவின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. உடலமாக மீட்கப்பட்ட சிசுவின் தாய் மற்றும் தந்தை, தாயின் சகோதரி, சகோதரியின் கணவன் பேன்று அவ் வீட்டில் இருந்த அனைவரும் நெல்லியடிப் காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பேருந்தில் இருந்து விழ்ந்து இளைஞன் பலி

கிளிநொச்சி பூநகரி பகுதியில் ஓடிக் கொண்டிருந்த பேருந்தில் ஏறமுட்பட்ட இளைஞன் தவறி வீழ்ந்ததில் பேருந்தின் சில்லுக்குள் அகப்பட்டு உயிரிழந்துள்ளார். பூநகரி 4ம் கட்டையைச் சேர்ந்த செல்வரத்தினம் வாசன் (22) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்தவர் ஆவார். இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவது, பூநகரியில் இருந்து வவுனியா நோக்கிச் செல்லும் பேருந்தில் ஓடிக் கொண்டு இருக்கும் போதே பாய்ந்து ஏற முற்பட்ட மேற்படி இளைஞன் கால் வழுக்கி வீழ்ந்ததில் பேருந்தின் சில்லுக்குள் அகப்பட்டுள்ளார்.

## மரண சாசனம் எழுதி விட்டுத் தூக்கில் தொங்கிய வயோதிபர்?

மரண சாசனம் எழுதி விட்டு வயோதிபர் ஒருவர் தூக்கில் தொங்கி தற்கொலை செய்துள்ளார். சண்டிலிப்பாய் - கல்வளைப் பிரதேசத்தில் கடந்த 16ம் திகதி இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தற்கொலை செய்து கொண்டவர் 69 வயதுடைய கணபதிப்பிள்ளை ஜெயசோதி எனும் வயோதிபராவார். தனது உடலிலுள்ள பல்வேறு நோய்களை தாங்க முடியாமலே தான் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக அவர் எழுதிவைத்த மரண சாசனத்தில் காணப்படுகிறது. திருமணம் செய்து கொள்ளாமல் தனது மைத்துனருடன் வாழ்ந்து வந்த நிலையிலேயே குறித்த வயோதிபர் தூக்கில் தொங்கி தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

### பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில்

# சிறீலங்காவின் 52 பேர் கொண்டகுழு ஜெனீவாவிற்கு பயணம் – இந்தியாவையும் வளைக்க முயற்சி

ஜெனீவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் கூட்டத்தொடரினை எதிர்கொள்ளக்கூடியவகையில் 52 பேர்கொண்ட பலமான அணியினை சிறீலங்கா அனுப்பவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறீலங்காவுக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்கப் போவதாக அமெரிக்கா எடுத்துள்ள அதிகாரபூர்வ முடிவை அடுத்து ஜெனிவா கூட்டத்தொடருக்கான சிறீலங்காவின் பிரதிநிதிகள் குழு 52 பேர் கொண்டதாக விரிவாக்கப்பட்டுள்ளது. சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அமைச்சர்கள் மகிந்த சமரசிங்க நிமால் சிறிபால டி சில்வா ரவூப் ஹக்கிம் றிசாத் பதியுதீன் அனுர பிரியதர்சன யாப்பா ஜோன் செனிவிரத்ன டிலான் பெரேரா மற்றும் சஜின் வாஸ் குணவர்த்தன உள்ளிட்ட முக்கிய அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தக் குழுவில் இடம்பெறவுள்ளனர்.

சிறீலங்கா பிரதிநிதிகள் குழுவுக்கு அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ் மற்றும் மகிந்த சமரசிங்க ஆகியோர் தலைமை தாங்கவுள்ளனர். மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் வரும் 27ம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் அடுத்தவாரம் இந்தக்குழு ஜெனீவா செல்லவுள்ளது.

இதேவேளை, ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சிறீலங்காவிற்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்தை முறியடிப்பதற்கு ஆதரவு கோரி இலத்தீன் அமெரிக்க மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு சிறீலங்கா அமைச்சர்கள் மட்டக்குழுக்களை அரசு அனுப்பியிருந்தது. எனினும், வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தவிர, ஏனைய அமைச்சர்களால் இந்த முயற்சியில் அவ்வளவாக வெற்றி பெறமுடியவில்லை என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு அனுப்பப்பட்ட சிறீலங்காவின் அமைச்சர்கள், அந்த நாடுகளின் பிரதி அமைச்சர் நிலைக்கு மேலுள்ள எவரையும் சந்திக்க முடியாமல் திரும்பி வந்துள்ளனர். அத்துடன், பொறுப்புக்கூறும் விவகாரத்தில் ஐ.நாவுடன் இணைந்து பணியாற்றுமாறு இலத்தீன் அமெரிக்க நாடுகள் சிறீலங்காவிடம் கூறியுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிலைமை இவ்வாறு இறுக்கமடைந்துவரும் நிலையில் இந்தியாவின் ஆதரவினை திரட்டும் நடவடிக்கையில் சிறீலங்கா இறங்கியுள்ளது. இது தொடர்பாக கொழும்பு அரசு தனது உயர்மட்ட இராஜதந்திரிகள் அடங்கிய குழுவொன்றை டில்லிக்கு அனுப்பி வைத்துள்ளது என்றும் அறியமுடிகின்றது.

டில்லியில் நிலைகொண்டுள்ள சிறீலங்கா இராஜதந்திரிகள் பட்டாளம் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சின் முக்கிய அதிகாரிகளைச் சந்தித்து ஜெனீவா விவகாரம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளது என இராஜதந்திர மட்டத்திலான தகவல்கள் தெரிவித்தன. சிறீலங்காவிற்கு எதிரான பிரேரணையை ஆதரிப்போம் என அறிவித்துள்ள அமெரிக்காவின் இராஜதந்திரிகள் சிறீலங்கா, இந்தியா ஆகிய நாடுகளுக்கு பயணம் செய்து நாடு திரும்பியுள்ள நிலையில், இரு நாட்டு இராஜதந்திரிகளும் சந்தித்துப் பேசுவதானது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

அதேவேளை, இலங்கை விவகாரம் தொடர்பில் இந்தியாவுடன் வொஷிங்டன் பலமுறை கலந்துரையாடியுள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கதொன்றாகும். அண்மையில், இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் மற்றும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் ஆகியோர் சந்தித்து அது விடயம் தொடர்பில் பேச்சு நடத்தியமையும் குறிப்பிடத்தக்கது. ஜெனீவா மாநாட்டில் சிறீலங்காவிற்கு எதிராக பிரேரணை வரும் பட்சத்தில் எவ்வாறானதொரு நிலைப்பாட்டை அது விடயம் தொடர்பில் எடுப்பது என்பது குறித்து இந்திய அரசின் இராஜதந்திரிகள் குழுவொன்று தற்போது தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது என்றும், அந்தப் பரிசீலனையை தனக்குச் சாதகமான முறையில் மாற்றியமைக்கும் முயற்சியில் சிறீலங்கா ஈடுபட்டுள்ளது என்றும் அரசியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஆனாலும், சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹ்லாரி கிளின்ரனின் அழைப்பை ஏற்று அடுத்த மாதம் அமெரிக்கா செல்ல மாட்டார் என வெளிவிவகார அமைச்சு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. கடந்த மாத இறுதியில் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹ்லாரி கிளின்ரன் எழுதிய கடிதம் ஒன்றில், மார்ச் மாதம் வொசிங்டனுக்கு வந்து பொறுப்புக்கூறுதல், நல்லிணக்கம், வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் மற்றும் இலங்கையின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து விளக்கமளிக்குமாறு கேட்டிருந்தார். இந்நிலையில், ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் முடிவடைந்த பின்னர் அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொள்வது குறித்து பீரிஸ் ஆலோசிக்கலாம் என்றும் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பீரிஸ் தற்போது அமெரிக்க பயணம் செய்தால், ஹிலாரி கிளின்ரனுக்கு அளித்த உறுதிமொழிகள் தொடர்பில் அறிக்கை வெளியிடவேண்டி வரலாம் என அஞ்சியே அமெரிக்கா செல்லத் தயங்குவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, 19வது மனித உரிமைகள் கூட்டத்தொடரின்போது சிறீலங்காவிற்கு இந்தியா பக்கபலமாக இருந்தது. இந்தியா இம்முறை எவ்வாறானதொரு தீர்மானத்தை சிறீலங்கா விவகாரம் தொடர்பில் எடுக்கும் என்பது அரசியல் வட்டாரத்தில் புரியாத புதிராகவே உள்ளது என்றும் ஆய்வாளர்கள் விமர்சித்துள்ளனர்.

இந்நிலையில், ஜெனீவா மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் சிறீலங்கா அரசுக்கு ஆதரவாக செயல்படக் கூடாது என்று மத்திய அரசுக்கு வைகோ கோரிக்கை விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது, ஈழத் தமிழ் இனத்தை அழிக்கப் படுகொலைகள் நடத்திய சிங்கள அரசுக்கும், அதற்கு உடந்தையாகச் செயல்பட்ட கொங்கிரஸ் தலைமையிலான இந்திய அரசுக்கும் வரலாற்றில் மன்னிப்பே கிடையாது. ஜெனீவாவில் உள்ள ஐ.நா.வின் மனித உரிமைகள் சபையில் பெப்ரவரி 27ம் திகதி கூட இருக்கிறது. ஈழத் தமிழர்களுக்கு விரோதமாக துரோகம் இழைத்து வரும் இந்திய அரசு நடைபெற்ற தமிழ் இனப் படுகொலையில் கூட்டுக் குற்றவாளியாகும் என்பது வரலாற்றில் மறைக்க முடியாத உண்மையாகும். 2009ல் இந்த மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் சிங்கள அரசுக்கு ஆதரவாகத் தீர்மாணம் கொண்டு வந்து நிறைவேற்றிய இந்திய அரசு, இப்பொழுது ஜெனீவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைக் கூட்டத்திலும் அத்தகைய துரோகத்தைச் செய்யக் கூடாது என்று இந்திய அரசுக்கு எச்சரிக்கை செய்கிறேன் என்று செய்தியாளர்களிடம் வைகோ தெரிவித்திருந்தார்.

Shop For Sale
11 Years lease
Located on a busy main road with schools nearby and bus stop infront. very spacious shop.
Rates: £7000 Turnover £16,000 p/w
Bus pass: £8000 p/w Lottery: £2700 p/w Paypoint: £6000 p/w
Cash Machine: £1500 Every 3months
1500 square feet total
(Renewal of rent After 3years)
Renewal every 4years
Rent: £23,000
Contact: 07885775043 / 02088889453

கடை விற்பனைக்கு
Métro École vétérinaire de Maisons-Alfort ற்கு
அண்மையில் தற்பொழுது தையல்கடை நடைபெறும் 25 M2 விஸ்தீரணமுள்ள கடையும், Cauveம் விற்பனைக்கு உள்ளது.
சநளவயரசயவெ தவிர்ந்த ஏனைய வர்த்தகங்களுக்கு அனுமதி உள்ளது.
தொடர்புகளுக்கு
01 48 93 07 91 / 06 67 77 06 60

FRIED CHICKEN SHOP FOR SALE
Near College, University and Hospital
Very good location, Good sales
Only 159,000
Rent 24,000 per annum
15 Years lease
No time waster please
0790 348 5015

# ஒரு தொலைகாட்சிப்பாடலும் உறைபனிக்குள்ளாக நடைபயணமும்

– ச.ச.முத்து –

எல்லோருடைய கனவுகளையும் அந்த சின்னஞ்சிறுமி கண்ணீர் ததும்பிநிற்கும் கண்களுடன் சொன்னதை கேட்ட அனைவரும் நிச்சயமாக உடைந்துபோய் இருப்பார்கள். ஒரு தேசம் எப்படி இவர்களிடம் இருந்து பிடுங்கி எடுக்கப்பட்டு, எப்படி இவர்கள் உலகின் திக்கெல்லாம் வீசி எறியப்பட்டு இருக்கிறார்கள் என்பதை விஜய் தொலைக் காட்சியின் ஒரு பாட்டுப்போட்டி ஒன்றின் அங்கம் ஒன்றில் சரிகா நவநாதன் மிகஆழமாக புரியவைத்திருந்தார்.

அவருடைய தந்தையான பெரியதம்பி நவநாதனுடன் கதைத்தபோது அவர் சொன்னார், இப்படி ஒரு சந்தர்ப்பம் அந்த பாட்டுப்போட்டியில் கிடைத்தால் நிச்சயமாக இந்தப் பாடலைத்தான் தான் படிப்பேன் என்று அந்த சிறுமி தன்னிடமும் தாயிடமும் சொல்லி இருந்தார் என்று சொன்னார்.

தனக்கு எங்காவது கிடைக்கும் ஏதாவது ஒரு அரிய



சந்தர்ப்பத்தையும் தனது தேசத்தின் விடுதலையை, தன்னிடம் இருந்து ஆயுத முனையில் பறிக்கப்பட்ட அந்த தேசத்தின் இனிமை வாழ்வை மக்களுக்கு சொல்லவேண்டும் என்ற அந்த சிறுமியின் நினைப்பும் நோக்கமும் பெரியவர்கள் அனைவருக்கும் ஏதோ ஒரு செய்தியை சொல்லி நிற்கின்றது.

வழமையான ஒரு நிகழ்வுக்குள் எப்படி எமது தேசிய செய்தியை சொல்வது என்ற அற்புதமான நேரத்தெரிவு அந்த சிறுமியுடையது. தமிழக தொலைக்காட்சிகள் அனைத்தும் வேறுவேறு பெயர்களில் வேறுபட்ட நடுவர்கள் வித்தியாசமான அனுசரணையாளர்களை முன்னிறுத்தி இப்படியான பாட்டுப்போட்டிகளை, சிறந்த குரல் தேர்வுகளை நடாத்திவருகிறார்கள். அப்படியான ஒரு நிகழ்ச்சிதான் விஜய் தொலைக்காட்சியின் 'யூனியர் சுப்பர் சிங்கர்' நிகழ்ச்சியும். ஆனால் பாருங்கள் ஒரு சாதாரண பாடல்நிகழ்ச்சியை தனது தேசத்தின் அடிமை நிலையை சொல்ல பயன்படுத்துகிறார். ஒரு பாடலை யாருக்கும் சமர்ப்பிக்கலாம் என்ற சுற்று வரும்போது அதனை 'பாட்டு எங்களை மாதிரி எங்கடை மண்ணைவிட்டு துரத்தப்பட்ட தமிழ் மக்களுக்காக எங்களை மாதிரி எங்கடை மண்ணைவிட்டு துரத்தப்பட்ட மக்களுக்காக' என்று சொல்லிவிட்டு தொடர்கிறார்.

ஒரு பெரும் பேரணி அல்லது ஒரு பெரும் அரசியல் போராட்டம் என்னவிதமான சலசலப்புகளையும் அதிர்வுகளையும் ஏற்படுத்துமோ அதே அளவுக்கு இந்த சிறுமியின் பாடலும் அதனை அவள் உள்ள உணர்வு கலந்துபாடிய விதமும் ஏற்படுத்தி இருக்கின்றது.

உண்மையில் இதுதான் விடுதலைக்காக போராடும் மக்களின் செய்தி. விடுதலையை தேடும் இனத்தின் வெளிப்பாடு. இதனை சொல்வதற்கு அந்த சிறுமி எந்த இராஜதந்திர கல்லூரியிலும் பயின்று பட்டம்பெற்று வரவில்லை. அந்த கடலுக்குள்ளை கன பேரோடை அழுகை சத்தமும் கண்ணீரும் அடங்கி இருக்கு. அந்த அலைகள் எங்களை மக்கள் நிறைய பேரோடை வாழ்க்கையை புரட்டிப்போட்டிருக்கு.

எங்களாலை எங்கடை சொந்த மண்ணில் மிதிக்க முடியுமா நிறைய கனவுகள் நிறைய ஆசைகள்? என்று தன் தலைமுறை தன்னுடைய வேர் இழந்துவிட்டு நிற்கின்றது என்ற சோகம் சொல்லுவதற்கு அவளுக்குள் உள்ளிருந்தது தன் தேசம், தன் தாயகம் என்ற எண்ணக்கருதான். நிச்சயமாக இந்த பாடலை கேட்ட எந்த மனிதனும் ஈழத்தமிழர்கள் தமது தாயகத்தை பறிகொடுத்து நிற்கின்றார்கள். அவர்களின் இந்த தாகம் என்றாவது தீரவேண்டும் என்று மனதுக்குள் நினைப்பான். சிலவேளை அதற்கான குரலையும் எழுப்புவான்.

இதுதான்... இதுதான்... அந்த பாடலின் வெற்றி.

இன்னுமொரு புறத்தில் இங்கே குளிரும் பனிப்பொழிவும் நிறைந்த ஐரோப்பிய சூழலில் ஜெனீவாவை நோக்கி சில

**எலும்புக்குள்ளும் நுழையும் குளிருக்குள்ளாக இவர்கள் நடந்துகொண்டிருக்கிறார்களே இவர்களும் அதே செய்தியைதான் தமது நடைபயணத்தின் மூலம் சொல்லியபடி நடக்கிறார்கள். நாம் என்ன செய்யப்போகின்றோம்.**

மனிதர்கள் நெஞ்சு நிறைந்த உறுதியுடனும் விடுதலைக்கான ஒரு நீண்டபயணத்தின் ஒரு அங்கமாக சர்வதேச கதவுகளை நீதிகேட்டு தட்டுவதால் ஏதேனும் ஒரு சிறு ஒளிக்கீற்று தன்னும் தமது இனத்துக்கு கிடைத்துவிட மாட்டாதா என்ற நம்பிக்கையுடன் நடந்துவந்து கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் இறுகப்போர்த்துக்கொண்டு கதகதப்பாக்கும் வெப்பகாற்றுகளுக்குள் அறைகளுக்குள் தூங்கி கிடக்கும் இந்த நாட்களிலும் அவர்கள் நடந்துவந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

எதிர்ப்படும் கிராமங்களின் மக்களுக்கு தமது தேசம் பறிபோனதையும் இனப்படுகொலை ஒன்றை செய்துமுடித்துவிட்டு உலகஅரங்கில் செங்கம்பள வரவேற்புகளுடன் சிங்களஅரச அதிகாரம் நடமாடி திரிவதை அம்பலமாக்கியபடியே அவர்கள் நடந்துவந்துகொண்டிருக்கிறார்கள்.

அவர்களை தாண்டியபடியே ஆயிரக்கணக்கான பயணிகள் தமது வாகனங்களில் கடந்து போய்க்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அவர்களின் மனதில் ஒரு கேள்வியை இந்த நடைபயணிகள் ஏற்படுத்தி இருப்பார்கள் நிச்சயமாக. 'ஏன் இவர்கள் இந்த பனிவீசும் கடும் குளிருக்குள் நடக்கிறார்கள். இவர்கள் ஏந்தி இருக்கும் கொடி எது. இவர்களின் கோரிக்கை எது' என்ற கேள்விகளை நிச்சயமாக இவர்கள் தாம் நடந்த பாதை மருங்கிலும் தூவி இருப்பார்கள்.

இவர்களின் நோக்கம் ஒன்றேதான். ஈழத்தமிழினம் பறிகொடுத்த இறைமையை, அவர்களின் சுயநிர்ணய உரிமையை மீட்டெடுப்பதுதான்.

இவர்களுக்கு தெளிவாகவே தெரியும். நடக்கப்போகின்ற ஜெனீவா மனித உரிமை கூட்டத்தொடரின் முடிவில் ஈழத் தமிழினத்துக்கு விடுதலையை தூக்கி தந்துவிடமாட்டார்கள் என்று.

ஆனாலும் விடுதலை மறுக்கப்பட்டு தொடரும் இனப் படுகொலைக்குள்ளும் இனச்சுத்திகரிப்புக்குள்ளும் ஒரு




இனம் அழிகின்றது என்ற உண்மை ஏற்கப்படுமானால் அதுவே பெரும் முன்னெழுச்சி இப்போது என்று.

ஒரு விடுதலைக்கான இனம் தனது அனைத்துவிதமான வெளிப்பாடுகளுக்குள்ளாகவும் தனது சுதந்திரவேட்கையை வெளிப்படுத்தியே தீரும் என்பதையே இந்த இரண்டு நிகழ்வுகளும் காட்டுகின்றன.

அந்த பதின்மூன்று வயதுச்சிறுமி தனது பாடல் போட்டி அரங்கை தனது தாயகத்தின் அடிமை நிலையை சொல்ல பயன்படுத்துகிறாள்.

இதோ எலும்புக்குள்ளும் நுழையும் குளிருக்குள்ளாக இவர்கள் நடந்துகொண்டிருக்கிறார்களே இவர்களும் அதே செய்தியைதான் தமது நடைபயணத்தின் மூலம் சொல்லியபடி நடக்கிறார்கள். நாம் என்ன செய்யப்போகின்றோம்.

அந்த சிறுமி பாடியதைகேட்டு அழுதுவிட்டு அடுத்த வேலைகளில் மூழ்கிவிடப்போகின்றோமா..?

இந்த குளிருக்குள்ளால் நடக்கிறார்களே என்று உச்சுக் கொட்டிவிட்டு அனுதாபத்தை விதைத்து விட்டு அறைகளுக்குள் முடங்கபோகின்றோமா..?

அவர்கள் எம் எல்லோரிடமும் கேட்பதும் வேண்டுவதும் இதைத்தான்.

எல்லோரும் ஒன்றாக ஜெனீவாவின் முன் திரள்வோம். எமக்கு சர்வதேசம் மறுத்துவிட்ட நீதியை மீண்டும் கேட்போம் என்பதுதான்.

'மறந்துபோகுமோ மண்ணின் வாசனை
தொலைந்துபோகுமோ துாரதேசத்தில்
வேப்பமரக் குயிலே என் வீடு இன்னும் இருக்கிறதா
ஏக்கமுடன் நீபாடும் ஒற்றைக்குரல் ஒலிக்கிறதா
வந்த இடம் ஒட்டவில்லை
தாய்நிலமோ எட்டவில்லை
சொந்தங்களும் பக்கமில்லை
சொல்லியழ நேரமில்லை
அன்னை நிலம் முத்தமிட்டு
அழுதுதுயர் தீர்வதெப்போ...'

GENEVA வில் இருந்து 18H27
GARE DE LYON வந்தடையும்
05.03.2012
நேரம் : 21H57
விபரம் 15 ம் பக்கம்

## சிறுமிகள் மீது பாலியல் வல்லுறவு, வயோதிபர் கைது

வவுனியா செட்டிகுளம் பகுதியில் இரு சிறுமிகள் மீது பாலியல் துஸ்பிரயோகம் மேற்கொண்ட வயோதிபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வவுனியா - செட்டிக்குளம் கண்ணாடி பாடசாலை பிரதேசத்தில் 9, 10 வயது சிறுமிகள் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 6ம் திகதி இந்த பாலியல் வன்முறை சம்பவம் இடம்பெற்றுள்ள நிலையில், குறித்த சிறுமிகளின் உறவினர்கள் 17ம் திகதி காவல்துறையில் முறையிட்டுள்ளார்கள். இதனையடுத்து 59 அகவையுடைய வயோதிபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## இலங்கையர் உட்பட 40 சிறுவர்களுக்கு பிரித்தானிய நட்டஈடு

சிறுவர் அகதிகளை இளைஞர் அகதிகள் என தடுத்து வைத்திருந்த விவகாரத்தில் சுமார் 40 சிறுவர் அகதிகளுக்கு பிரித்தானிய அரசு 1.4 மில்லியன் அமெரிக்க டொலர்களை நட்ட ஈடாக செலுத்தியுள்ளது. சிறிய வழக்கு ஒன்றிற்கு பிரித்தானியா அதிக நட்டஈடு வழங்கிய விவகாரமாக இது மாறியுள்ளதென பிரித்தானியாவின் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. இத்திட்டமானது சட்டத்திற்கு புறம்பானது என பிரித்தானியா அரசாங்கம் ஏற்றுக் கொண்டதோடு, எதிர்காலத்தில் அதனை திருத்திக் கொள்வதாகவும் அறிவித்துள்ளது. இருந்த போதும் குறித்த சிறுவர் அகதிகள் இன்னும் இளைஞர்கள் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கை, ஆப்கானிஸ்தான், ஈரான், நைஜீரியா, எரித்திரியா, உகண்டா, சோமாலியா மற்றும் சீனா உள்ளிட்ட 16 நாடுகளைச் சேர்ந்த 25 சிறுவர்களும் 14 சிறுமியர்களும் இதில் உள்ளடங்குகின்றனர்.

## சிறீலங்கா ஆயுர்வேத வைத்தியர்கள் தமிழகத்தில் இருந்து விரட்டியடிப்பு

சிறீலங்காவைச் சேர்ந்த ஆயுர்வேத மருத்துவர்கள் 21 பேர், 5 நாள் சிறப்பு பயிற்சிக்காக, தமிழகம் கோவை நவகரையிலுள்ள ஒரு பிரபல ஆயுர்வேத மருத்துவமனை வளாகத்துக்கு சென்றிருந்தனர். இதை அறிந்த ம.தி.மு.க கோவை புறநகர் மாவட்ட செயலாளர் ஈஸ்வரன் தலைமையில் ம.தி.மு.கவினர் கடந்த 17ம் திகதி வெள்ளிக்கிழமை அங்கு சென்று, இவர்களை உடனடியாக இலங்கைக்கு திருப்பி அனுப்ப வேண்டும். தமிழர்களைக் கொன்று குவித்த சிறீலங்கா அரசின் பிரதிநிதிகளாக வந்துள்ள இவர்களுக்கு இங்கு பயிற்சி அளிக்கக்கூடாது என்றனர். இவர்களை திருப்பி அனுப்ப உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறியதை தொடர்ந்து மதிமுகவினர் திரும்பினர். இதேவேளை, மறுநாள் மருத்துவமனை முற்றுகைப் போராட்டம் நடத்தப்பட உள்ளதாக பெரியார் திராவிடர் கழகம் அறிவித்தது. இதனையடுத்து, அங்குசென்ற தமிழகக் காவல்துறையினர் நிலைமையின் விபரீத்தை எடுத்துக்கூறி சிறீலங்கா ஆயுர்வேத மருத்துவர்களை கேரளாவுக்கு அனுப்பி வைத்தனர்.

## பிரேசிலில் இருந்து சிறீலங்காவிற்கு போதைப்பொருள்!

45 மில்லியன் ரூபா பெறுமதியுடைய கொக்கையின் போதைப் பொருளை பிரேசிலில் இருந்து இலங்கைக்கு கடத்திவந்த பிலிபைன்ஸ் நாட்டு பெண் கைது செய்யப்பட்டுள்ளார். கட்டுநாயக்கா விமான நிலைய சுங்க அதிகாரிகள் கடந்த 16ம் திகதி குறித்த பெண்ணை கைது செய்தனர். இதேவேளை, யாழ்ப்பாணத்திற்கு கடல்வழியாக போதைப்பொருள் கடத்திய இருவர் காங்கேசன்துறைப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பத்தரைக் கிலோ கஞ்சாவுடன் காங்கேசன்துறை ஊடாக கடல்வழியாக கஞ்சா கடத்த முற்பட்ட இருவரை சிறீலங்கா கடற்படையினர் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டில்லி அதிவேக தொடருந்தில் களவுபோன சிறீலங்கா இராணுவ அதிகாரியின் பயணப்பை

டில்லி தொடருந்து நிலையத்தில் வைத்து மல்வா அதிவேக தொடருந்தில் சிறீலங்கா இராணுவ அதிகாரி ஒருவரின் பயணப் பை இனந்தெரியாத நபர்களால் களவாடப்பட்டுள்ளது. கடந்த 13ம் திகதி களவாடப்பட்ட இந்தப் பயணப் பையில் சிறீலங்கா இராணுவ அதிகாரியின் பணம், சடவுச்சீட்டு உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பயணப் பையைத் தொலைத்த சிறீலங்கா இராணுவ அதிகாரி மேஜர் டி.கே.களுதேவ என அடையாளம் காணப்பட்டுள்ளார். முகாம் ஒன்றில் பங்குபற்ற டில்லியில் இருந்து இந்தூர் சென்ற இவர், தனது பயணப் பையில் கடவுச்சீட்டு, கடனட்டை, 4 ஆயிரம் ரூபா இந்தியப் பணம், 5 ஆயிரம் ரூபா இலங்கைப் பணம் உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் இருந்ததாக முறைப்பாடு செய்துள்ளார். பயணப் பை காணாமல் போன தொடருந்தின், குளிரூட்டப்பட்ட முதல் வகுப்பு ஆசனத்தில் குறித்த இராணுவ அதிகாரி பயணம் செய்துள்ளார்.

## கனடாவில் சிறீலங்கா இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு!

சிறீலங்கா இளைஞர்களுக்கு கனடாவில் அதிக வேலை வாய்ப்பு சந்தர்ப்பங்கள் கிடைத்துள்ளன. அண்மையில் கனடா சென்ற சிறீலங்கா வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவர் அமல் சேனாலங்காதிகார, கனேடிய அதிகாரிகளுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் மூலம் இச்சந்தர்ப்பங்கள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி கனடாவின் விடுதிகள் மற்றும் சுற்றுலாத் துறைகளில் சிறீலங்கா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவுள்ளது. இது தொடர்பான பரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட கனேடிய அதிகாரிகள் சிலர் விரைவில் இலங்கை வரவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தமது நாட்டுக்கு வரும் தமிழ் அகதிகளை தடுத்து நிறுத்த கனடா நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது தெரிந்ததே.

# டோகோவில் கைவிடப்பட்டவர்கள்

# பல கோடி மோசடி செய்ததாக இளைஞன் வவுனியாவில் கைது

இல்ங்கையிலிருந்து 260க்கும் மேற்பட்டோரை கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறி பல கோடி ரூபாவை பெற்றுக் கொண்டு ஆபிரிக்க நாடான டோஹோ மற்றும் மாலிக்கு கொண்டு சென்று கைவிட்ட பிரதான சூத்திரதாரியை தாங்கள் கைது செய்துள்ளதாக கொழும்பு குற்ற ஒழிப்புக் காவல்துறையினா் தெரிவித்துள்ளனா்.

கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறி ஏமாற்றி சுமார் 269 பேரை ஆபிரிக்க நாடான டோஹோவுக்கும் மாலிக்கும் அனுப்பிய இவர்கள், அங்கிருந்து இவர்களை கனடாவுக்கு அனுப்ப முயற்சி செய்யாத நிலையில் அங்கு விசா காலாவதியானதால் அனைவரும் பிடிபட்டனர்.

கடந்த ஒக்டோபர் 24ம் திகதி டோகா நாட்டில் தங்கியிருப்பதற்கான நுழைவிசா காலாவதியான நிலையில் தாங்கள் கைது செய்யப்பட்டதாகவும், திறந்தவெளி மைதானம் ஒன்றில் இராணுவ பாதுகாப்பில் சிறை வைக்கப்பட்டுள்ள தங்களை, சுயவிருப்பின் அடிப்படையில் இலங்கைக்குத் திரும்பிச் செல்லுமாறும் அல்லாது போனால் கட்டாயமாக நாடுகடத்தப்படும் நிலை ஏற்படும் என்றும் சிறீலங்கா அதிகாரிகளால் எச்சரிக்கப்பட்டு சிலரிடம் வலுகட்டாயமாக கையொப்பம் பெறப்பட்டு நாடு கடத்தப்பட்டதாகவும் இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவருடன் ஊடக இல்லம் தொடர்புகொண்டு வினவியபோது தெரிவித்திருந்தார்.



போரினால் பாதிக்கப்பட்டு, இறுதிப் போரில் முள்ளிவாய்க்காலில் இருந்து தப்பித்து புலம்பெயர்ந்து செல்லும் முடிவிற்கு வந்த தங்களுடன் பொருளாதார நலன்களுக்காக வெளிநாடுகளுக்கு செல்லும் முஸ்லீம்கள் உட்பட சிலர் இருந்ததாகவும் இதனால் அனைவரும் பொருளாதார நலன் சார்ந்த அகதிகளாக வர்ணிக்கப்படுவதாகவும் கூறிய அவர், நாடு கடத்தப்படும் இடத்தில் இலங்கையில் தங்களது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தார். அத்துடன், பொருளாதார அகதிகளாக வெளிநாடுகளுக்கு செல்வதாக இருந்தால் இத்தனை ஆபத்து மிகுந்த பயணத்தில் தங்கள் குழந்தைகளையும் கொண்டு செல்ல முனைவார்களா என்றும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்நிலையில்தான் இவர்களை அனுப்பியதாக இலங்கையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஒவ்வொருவரிடமும் தலா ஐந்து இலட்சம் ரூபா முதல் 25 இலட்சம் ரூபா வரை பல கட்டங்களாக அறவிட்டு இவர்களை டோஹோ நாட்டிற்கு கொண்டு சென்று பின்னர் கனடாவுக்கு இவர்களை அனுப்பாது மோசடிக்காரர்கள் கைவிட்டுள்ளனர் என்று சிறீலங்கா காவல்துறை தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைவிடப்பட்டு அந் நாட்டில் திறந்தவெளி தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 209 இலங்கைத் தமிழர்களில் 28 பேர் வரை நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இவ்வாறு வலுகட்டாயமாக நாடு கடத்தப்பட்ட சிலர் விசாரணை என்ற பெயரில் சிறீலங்காவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. மிகுதிப் பேர் டோஹோவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதில் மூவர் முஸ்லிம்கள். ஏனைய 266 பேரும் வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலையைச் சேர்ந்தவர்கள். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் மிகக் குறைவு. இவர்கள் அனைவரையும் முன்னாள் விடுதலைப் புலிகள் எனக் கூறுமாறு தெரிவித்தே மோசடிக்காரர்கள் ஆபிரிக்க நாடுகளுக்குக்கூட்டிச் சென்று அந்நாட்டு அதிகாரிகளைப் பணபலத்தின் மூலம் ஏமாற்றி இவர்களை அந்தநாடுகளில் தங்க வைத்துவிட்டு பின்னர் விசா காலாவதியானதால் அந்நாட்டு காவல்துறையினரிடம் பிடிபடவைத்து அவர்களை இலங்கைக்கு மீண்டும் நாடு கடத்த வைப்பதுடன் அவர்களிடமிருந்து பெற்ற பல இலட்சம் ரூபாவுடன் வசதியான நாடொன்றுக்குச் சென்று அங்கு தங்கிவிடுவதே மோசடிக்காரர்களின் திட்டமாகும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே இவர்கள் 269 பேரிடமும் பல இலட்சம் ரூபா பணமோசடி செய்த குற்றச்சாட்டின் பேரில் கடந்த 17ம் திகதி வெள்ளிக்கிழமை வெள்ளவத்தையில் வைத்து குற்ற ஒழிப்புப் பிரிவு காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார். இரகசிய தகவலொன்றின் பேரில் இவரைப் பின்தொடர்ந்த காவல்துறையினா் இவர் விடுதி (லொட்ஜ்) ஒன்றுக்கு வரும் போது மடக்கிப் பிடித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் வடமராட்சி பருத்தித்துறை புலோலியைச் சேர்ந்த அருணகிரிநாதன் ஜெயரூபன் (24 வயது) என்பவரே இந்தப் பணமோசடி மற்றும் ஏமாற்று வேலைக்காகக் கைது செய்யப்பட்டவரென காவல்துறையினா் தெரிவித்தனர். இவர் வவுனியா பிள்ளையார் கோயில் வீதியிலேயே தங்கியிருந்துள்ளார். யாழ்ப்பாணத்தில் அரசசார்பற்ற நிறுவனமொன்றில் இவர் கடமையாற்றியதாகவும் காவல்துறையினா் தெரிவித்தனர்.

சிங்கப்பூரிலுள்ள நண்பன் ஒருவர் பணத்தாசை காட்டியதாலேயே இவர் இந்த மோசடியில் ஈடுபட்டு 269 பேரையும் ஏமாற்றி ஒவ்வொருவரிடமும் பெரும்பாலானோரிடம் 25 இலட்சம் ரூபா வரை பெற்று கோடிக்கணக்கான ரூபா பணத்தை சுருட்டியுள்ளார். இவர்களது வலையில் விழுந்தவர்களை ஆபிரிக்காவின் டோஹோவுக்கும் (209 பேர்), மாலிக்கும் (60 பேர்) அனுப்பியுள்ளனர். எதியோப்பியா எயார் லைன்ஸ் மூலமே அனைவரும் அனுப்பி வைக்கப்பட்டனர். ஒரே நேரத்தில் இந்தளவு பேர் ஆபிரிக்க நாடுகளுக்கும் ஏன் செல்கிறார்களென்ற சந்தேகம் விமான நிலைய அதிகாரிகளுக்கு ஏற்படுவதைத் தடுப்பதற்காக ஒவ்வொருவரும் தங்கள் கடவுச் சீட்டுகளுக்குள் நூறு டொலரை வைத்து அதிகாரிகளிடம் அவற்றைக் கொடுக்க அவர்களும் அவற்றை எடுத்துக் கொண்டு எதுவித கேள்வியும் கேட்காது அனுப்பி வைத்துள்ளதாகவும் விசாரணையில் தெரிய வந்ததாக காவல்துறையினா் தெரிவித்தனர்.

பணத்தைப் பெற்றவர்கள் கனடாவுக்கு அனுப்பப்படாவிட்டால் அவர்களுக்கு மீண்டும் பணம் ஒப்படைக்கப்படுமென வெற்று பேப்பர் ஒன்றில் முத்திரை ஒட்டி கையெழுத்திட்டு கொடுத்துள்ளார். ஆனால், இதுவரை எவருக்கும் இவர் பணத்தை ஒப்படைக்கவில்லை. பணத்தை முழுவதுமாக பெற்ற பின் ஆபிரிக்க நாடுகளுக்கு அனுப்பியவர்களை இடைநடுவில் கைவிட்டு விட்டு அவர்கள் கொடுத்த கோடிக்கணக்கான ரூபா பணத்துடன் வெளிநாட்டுக்கு தப்பிச்

(18ம் பக்கம் பார்க்க)

ஈழமுரசுலீக்ஸ்
Eelamurazuleaks

# சேரமான்

## தந்திரிகளின் மறுமுகம் - 43

**சேரமானின் இந்தத் தொடர் கட்டுரைக்கு இதில் பெயர்குறிப்பிடப்பட்ட சம்பந்தப்பட்டவர்கள் மறுப்புத் தெரிவித்து தங்களது மறுப்பை எழுத்துமூலமாகத் தருவார்களானால் அதனைப் பிரசுரிப்பதற்கும் நாம் தயாராகவே உள்ளோம்.**

**(ஆ-ர்)**

# போலி நம்பிக்கைகளின் இன்னுமொரு பக்கம்

எரிக் சுல்கைம், ஜேம்ஸ் கிளாட் போன்ற மேற்குலக அமைச்சர்களுடனும், கருணாநிதியின் புதல்வி கனிமொழி அவர்களுடனும் வன்னியிலிருந்து தொலைபேசி வாயிலாக உரையாடல்களை நிகழ்த்திப் போர்நிறுத்தத்தைக் கொண்டு வருவதற்கு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்கள் எடுத்த முயற்சிகள் அனைத்தும் முயற்கொம்பாகிக் கைகூடாது போக, தந்திரோபாய அடிப்படையில் கிளிநொச்சியை விட்டுப் பின்வாங்குவதைத் தவிர 2008 ஆம் ஆண்டின் இறுதியில் வேறு தெரிவுகள் எவையும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இருக்கவில்லை.

தெற்கே இரணைமடு வழியாகவும், மேற்கே புதுமுறிப்பு வழியாகவும், வடமேற்கே பெரியபரந்தன் வழியாகவும் கிளிநொச்சி நகரின் மையப்பகுதியைக் குறிவைத்து முன்னேறிக் கொண்டிருந்த எதிரி மீது உக்கிர எதிர்த் தாக்குதல்களை நிகழ்த்தி சிங்களப் படைகளுக்கு பெரும் இழப்புக்களைப் புலிவீரர்கள் ஏற்படுத்தினாலும்கூட, எதிரியோ சளைப்பதாக இல்லை. ஜெயசிக்குறுய் எதிர்ச்சமர்க்காலத்தில் புலிச்சேனைகளின் எதிர்த்தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாது பின்வாங்கி ஓடி அடிக்கடி மோதல்களுக்கு இடைவெளி கொடுப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட அதே எதிரியை நான்காம் கட்ட ஈழப்போரில் புலிவீரர்கள் எதிர்நோக்கவில்லை.

இந்தியா, சீனா, பாகிஸ்தான், இஸ்ரேல், ஈரான், வட

**இம்முடிவை தொலைபேசி வாயிலாக கே.பியிடம் தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் தெரியப்படுத்தினார். இதுவே தமிழீழ தேசியத் தலைவருக்கும், கே.பியிற்கும் இடையில் இறுதியாக நடைபெற்ற தொலைபேசி உரையாடலாகவும் அமைந்தது. இதன்பொழுது ஒரு விடயத்தை தேசியத் தலைவர் அவர்கள் தெளிவாக எடுத்துக்கூறியிருந்தார்.**

கொரியா, ரஷ்யா, உக்ரெய்ன், செக் குடியரசு, அமெரிக்கா என உலகின் கிழக்குக் கோடியிலிருந்து மேலைத்தேசம் வரை உலக நாடுகள் தாராளமாக அள்ளிக் கொடுத்த படைக்கலங்களால் பன்மடங்கு வலிமைபெற்று பெருமெடுப்பில் சுடுதிறனைப் பிரயோகித்தவாறு நில ஆக்கிரமிப்பு யுத்தத்தை முன்னெடுத்த எதிரியை புலிவீரர்கள் எதிர்கொண்டிருந்தனர்.

ஒருபுறம் களமுனையில் யுத்த விமானங்கள் சகிதம் அகோர குண்டுமழை பொழிந்து, இடைவிடாது பீரங்கிக் கணைகளை ஏவித் தமிழீழ விடுதலைப் புலிகளின் மண் அணைகளை எதிரியின் சுடுதிறன் சிதைக்க, மறுபுறம் பட்டியிலிருந்து அவிழ்த்து விடப்பட்ட கடாய்கள் போன்று அலை அலையாக புலிவீரர்களின் நிலைகளை நோக்கி சிங்களப் படைகள் முன்னேறிக்கொண்டிருந்தன. புலிச்சேனைகளின் எதிர்த் தாக்குதல்களில் அப்பொழுது பெரும் ஆளணி இழப்புக்களுக்கு சிங்களப் படைகள் ஆளாகிக் கொண்டிருந்தாலும்கூட, அதனையிட்டு சிங்களப் படைத் தலைமையோ, சிங்கள ஆட்சியாளர்களோ கவலை கொள்ளவில்லை.

"புலிகள் மீது இடைவிடாது தாக்குதல்களை நிகழ்த்துங்கள். உங்களுக்கு இழப்புக்கள் ஏற்பட்டாலும் அதைப்பற்றிக் கவலைப்படாது புலிகளுக்கு ஓய்வு கொடுக்காது தொடர்ந்து தாக்குங்கள். அப்பொழுது வேறு வழியின்றி அவர்கள் பின்வாங்குவார்கள்" என்று கருணா அளித்த ஆலோசனைக்கு இணங்க கோத்தபாய ராஜபக்ச இட்ட கட்டளையை சிரமேற்கொண்டு தமது ஆயுதப் படைகளை கிளிநொச்சிக் களத்தில் சிங்களத் தளபதிகள் பலிகொடுத்த வண்ணமிருந்தனர். இவ்வாறு பலியான சிங்களப் படையினரில் ஒரு சில வாரங்கள் மட்டும் ஆயுதப் பயிற்சி பெற்று களமிறக்கப்பட்டவர்களும் பல்லாயிரக்கணக்கில் இருந்தனர்.

இவ்வாறு கிளிநொச்சி நகரை மையப்படுத்தித் தனது படைவலிமையை எதிரி குவித்திருந்தாலும்கூட, வன்னியின் ஏனைய இடங்களிலும் புதிய களமுனைகளைத் திறப்பதற்கும் எதிரி தயங்கவில்லை. ஒருபுறம் வன்னியின் கிழக்குக் கோடியில் உள்ள முல்லைத்தீவு நகரை நோக்கி தொடர்ச்சியாக திசைதிருப்பல் நடவடிக்கைகளை மேற்கொண்டவாறு, மறுபுறம் ஒட்டுசுட்டானுக்கும், முள்ளியவளைக்கும் இடைப்பட்ட கூழாமுறிப்பு காட்டுப்பகுதியை நோக்கியும், முத்தையன்கட்டின் திசையிலும் எதிரிப் படைகள் முன்னேறிக் கொண்டிருந்தன. போதாக்குறைக்கு யாழ் குடாநாட்டின் தென்முனையாக விளங்கிய கிளாலி–



முகமாலை–நாகர்கோவில் நெடுங்கோட்டிலும் மற்றுமொரு பெரும் படை நகர்வுக்கு எதிரிப் படைகள் ஆயத்தமாகிக் கொண்டிருந்தன.

இப்படியாக மிகவும் இறுக்கமான கட்டத்தை வன்னிக் களம் எட்டியிருந்த நிலையில் வன்னியின் கிழக்கேயுள்ள விசுவமடு, உடையார்க்கட்டு, புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளின் திசையில் பல்லாயிரக்கணக்கில் மக்கள் இடம்பெயர்ந்த வண்ணமிருந்தனர். வன்னியில் கடும் மழை பொழிந்து கொண்டிருந்த நிலையில், இது தமிழீழ விடுதலைப் புலிகளை மற்றுமொரு இக்கட்டிற்குள் இட்டுச் சென்றிருந்தது. வன்னியை விட்டு பன்னாட்டு மனிதநேய அமைப்புக்கள் அனைத்தும் வெளியேறியிருந்த நிலையில், கன மழைக்கும், வெள்ளப் பெருக்கிற்கும், எதிரியின் எறிகணை வீச்சுக்களுக்கும், விமானக் குண்டுவீச்சுக்களுக்கும் மத்தியில் இடம்பெயர்ந்து வீதியோரங்களில் பெரும் அவலத்திற்கு ஆளாகியிருந்த மக்களுக்கான மனிதநேயப் பணிகளை முன்னெடுத்து, வன்னி மண்ணில் மனிதப் பேரவலம் ஏற்படுவதை தடுத்து நிறுத்தும் பொறுப்பும் முற்று முழுதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கைகளில் வீழ்ந்திருந்தது.

இவ்வாறானதொரு நிலை ஏற்படும் என்பதை ஓரளவுக்கு முற்கூட்டியே புரிந்துகொண்டதன் காரணமாகவே 2008 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நிரந்தர போர்நிறுத்தத்திற்கான சமிக்ஞைகளை உலக சமூகத்தை நோக்கி தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்திருந்தார்கள் எனக் கூறின் மிகையில்லை.

ஆனாலும் இதுபற்றி வன்னிக்குப் பயணம்செய்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நிகழ்த்துவதற்கு உலகம் தயாராக இருக்கவில்லை. மாறாக ஆயுதக் களைவுபற்றியும், அதனையொட்டிய அரசியல் தீர்வு குறித்தும் பேசுவதிலும், தமிழீழ விடுதலைப் புலிகளை சரணாகதி நிலைக்கு இட்டுச்செல்வதிலுமே உலகம் குறியாக இருந்தது.

மறுபுறம் வெளிநாடுகளில் இராசதந்திர வேலைகளில் ஈடுபடுவதாக வன்னிக்குப் போக்குக்காட்டி கொண்டு இந்தியாவினதும், வல்லரசுப் புலனாய்வு நிறுவனங்களினதும் நிகழ்ச்சித் திட்டங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் மீது திணிப்பதிலேயே உருத்திரகுமாரனும், அவரது சகபாடிகளும் ஈடுபட்டிருந்தனர். இவ்வாறு யுத்த களத்திலும்,

(13ம் பக்கம் பார்க்க)

GENEVAவில்
அனைவரும் அணிதிரள்வோம்
05.03.2012
விபரம் 15ம் பக்கம்
United Nations



# செய்திகளும் எழும் கேள்விகளும்

தெய்வமகள்

**செய்தி:-** 'சூழ்நிலை' என்ற திரைப்படத்தில் பூணூரலை அறுத்து வீசுவதாக படத்தில் காட்டியதற்காக, திரைப்பட இயக்குநருக்கு தொலைபேசி மிரட்டல் விடப்பட்டுள்ளது.

**எழும் கேள்வி:-** இவர்கள் பாரதி படம் பார்க்கவில்லையா?

★★★★

**செய்தி:-** சிங்கப்பூரில் உள்ள தாவரவியல் பூங்காவிற்கு மகிந்த குழுவினர் சென்றபோது, அங்குள்ள ஆர்க்கிட் மலரொன்றுக்கு மகிந்த – ஷிராந்தி என பெயரிடப்பட்டுள்ளதாக சிறீலங்கா ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** இரத்தம் குடிக்கும் பூவோ..?

★★★★

**செய்தி:-** செல்பேசி வேண்டும் என்றுதான் பெண்கள் கேட்கின்றனர். கழிப்பறைகள் வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுப்பதில்லை என்று இந்திய மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** நாடே கழிப்பறைதான் இதில் பிரத்தியேகமாக ஒரு கழிப்பறையா என்று எண்ணிவிட்டார்களோ?

★★★★

**செய்தி:-** அனுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றிற்காக சிறீலங்காவின் பிரதமர் டி.எம்.ஜயரட்ன உலங்குவானூர்தியில் பயணம் செய்திருந்தார். எனினும், பிரதமருக்காக காத்திருக்காது குறித்த உலங்குவானூர்தி கொழும்பு திரும்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது. பிரதமரின் பாதுகாப்புப் பிரிவினரிடம் அறிவிக்காமல் திடீரென குறித்த உலங்குவானூர்தி கொழும்பு திரும்பியுள்ளது.

**எழும் கேள்வி:-** மன்னிடம் இருந்து அழைப்பு வந்திருக்கும், அதுதான் மந்திரியை மறந்துவிட்டார்கள் போலும்?

★★★★

**செய்தி:-** இத்தாலியர்களால் இரண்டு மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதற்கு இத்தாலியத் தூதரை உடனடியாக அழைத்த இந்தியா, தனது கண்டனத்தை வெளியிட்டு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியுள்ளது.

**எழும் கேள்வி:-** இத்தாலியத் தூதரைக் கண்டித்த விடயம் சோனியாவிற்கு தெரியுமா?

★★★★

**செய்தி:-** வன்னிப் பகுதியில் சுமார் 3 ஆயிரத்து 800 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் 1.5 மில்லியனுக்கும் அதிகமான மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கலாம் என வடமாகாணத்திற்கான சிறீலங்கா ஆளுநரினால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**எழும் கேள்வி:-** தமிழர்களை சொந்த நிலத்தில் குடியேறவிடாமல் தடுக்கத்தான் இந்தக் கண்ணிவெடிப் பூச்சாண்டியா?

★★★★

**செய்தி:-** ஜனாதிபதி மகிந்தவினால் தனக்கு ஒதுக்கப்பட்ட பணிகளால் அனைத்துலகச் சமூகத்தில் தான் மரியாதையை இழந்து விட்டதாகப் புலம்பியுள்ளார் சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ். முஸ்லிம் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் நடந்த இராப்போசன விருந்தில் தனது நெருக்கமான நண்பர்களிடமே அவர் இவ்வாறு கூறியுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

**எழும் கேள்வி:-** கழுதைக்கு வாழ்க்கைப்பட்டுவிட்டு உதைக்கு அஞ்சினால் எப்படி?

★★★★

**செய்தி:-** இலங்கையின் நகர்புறங்களில் பிச்சை எடுப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாக சிறீலங்கா சமூக சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது. நாடு முழுவதும் கணக்கெடுக்கப்பட்டதில் நகர்புறங்களில் பிச்சை எடுப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

**எழும் கேள்வி:-** அரசாங்கமே உலக நாடுகளிடம் கோடிக் கணக்கிலை பிச்சை எடுக்கும்போது, சில்லறைப் பிச்சை எடுப்பவர்களை எப்படித் தடுக்கமுடியும்?

★★★★

**செய்தி:-** இறுதி போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு சிறீலங்கா இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய இராணுவ நீதிமன்றத்தை நியமித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளையும் விட்டுவிட்டீர்கள் என்றால், அவர்களே நீதிமன்றம் ஒன்றை அமைத்து தங்களைத் தாங்களே விசாரித்து நீதி வழங்கிக்கொள்வார்களே?

# யாழில் முளைவிடும் சிங்கள பாடசாலை!

ஜெ.நா.நோக்கி புலம்பெயர் தமிழ் உறவுகள், சிங்களத்தின் கோரத் தாண்டவத்தினை சர்வதேசத்தின் முன் அம்பலப்படுத்தக் கோரி புறப்படத் தயாராகிவரும் நிலையிலும் தமிழர் தாயகப் பகுதி எங்கும் சிங்களத்தின் அத்துமீறல்கள் தொடர்கின்றன. யாழ்குடாவில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் தொடர்பாக இப்பகுதியில் பல தடவைகள் குறிப்பிட்டிருந்தோம். அதன் தொடர்ச்சியாக சிங்களத்தின் காய்நகர்த்தல்கள் தற்போது தீவிரம் பெற்றுள்ளன. அங்கு குடியேறிய சிங்களவர்களின் கல்விச்செயற்பாடுகளுக்கென பாடசாலைகளை ஆரம்பிக்கும் நடவடிக்கையில் சிங்களம் முனைப்புக் காட்டிவருகின்றது.

யாழ் குடாநாட்டிலுள்ள நாவற்குழிப் பகுதியில் அத்துமீறி குடியேறியுள்ள சிங்களவர்களுக்காக மீண்டும் யாழ் சிங்கள மகாவித்தியாலயத்தினை இயங்க வைக்கும் நடவடிக்கையில் வடமாகாண ஆளுனரின் தலைமையில் படைத்தரப்பு மேற்கொண்டு வருகின்றது.

யாழ் தொடருந்து நிலையத்தில் வந்திறங்கி தாம் யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டு தம்மை அரச காணியில் குடியமர்த்தவேண்டும் என்று தெரிவித்து யாழ் அரச அதிபருடன் விடாப்பிடியாக பல கோரிக்கைகளை விடுத்த மேற்படி சிங்களவர்கள் யாழ் மாவட்ட கட்டளைத் தளபதி ஹத்துறுசிங்கவினதும் வடமாகாண ஆளுனர் சந்திரசிறியினதும் நெறிப்படுத்தலில் யாழ் நாவற்குழியில் அத்துமீறி குடியமர்ந்தமை தெரிந்ததே.

மேற்படிச் சிங்களவர்களின் அத்துமீறல்கள் தொடர்பாகப் பொறுப்புக் கூற வேண்டிய யாழ் அரச அதிபர் கண்டும் காணாததுபோல் இருந்துள்ளார். இதனால் சிங்களவர்களது அத்துமீறிக்குடியேறும் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துச் சென்றது: அதிகரித்து வருகின்றது. தமிழ் மக்களது பிரதேசங்களை கையகப்படுத்தும் ஒரே நோக்கத்திற்காக யாழில் குடியேற வைக்கப்பட்ட சிங்களவர்களது குடும்பங்கள் முழுமையாக இதுவரை வந்து குடியேறவில்லை. குறிப்பாக இங்கு குடியேறியுள்ள குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் இன்னமும் தென்னிலங்கையில் உள்ள பாடசாலைகளிலேயே கல்வி கற்று வருகின்றார்கள். இதுமட்டுமல்லாமல் பெரும்பாலானவர்கள் தமது தொழில் நடவடிக்கைகளையும் இங்கு ஆரம்பிக்கவில்லை.

அவர்கள் குடியேறியுள்ள நாவற்குழி பகுதியில் பல கூடாரங்கள் மற்றும் அரை நிரந்தர வீடுகள் போடப்பட்டுள்ளபோதும் அங்கு சுழற்சி முறையிலேயே தென்னிலங்கையில் இருந்து வந்து தங்கிவிட்டுச் செல்கின்றார்கள். ஆனாலும் அவர்களுக்கான மறைமுகமான அரச உதவிகள் வழங்கப்பட்டுக்கொண்டே வரப்படுகின்றது.

மேற்படி சிங்களவர்களுக்கு சகல வழிகளிலும் உதவிகளை வழங்கி வரும் ஹத்துறுசிங்க மற்றும் வடமாகாண ஆளுனர் ஆகியோர் இணைந்து சிங்களவர்களின் குடியேற்றங்களை மேலும் பலப்படுத்தி இவர்களது பிள்ளைகள் யாழிலேயே கல்வி கற்பதற்காக யாழ் சிங்கள மகாவித்தியாலயத்தினை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முழு முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறான அத்துமீறல்கள் தொடர்பாக கண்டும் காணததுபோல் இருக்கும் யாழ் அரச அதிபரும் இவர்களுக்கான மறைமுகமான உதவிகளை மேற்கொண்டு வருவதுடன் தன்னை இவ்விடயத்தில் சம்பந்தப்படுத்திக் கொள்ளாதது போல் குடாநாட்டு ஊடகங்கள் முன்பாக நடந்து கொள்கின்றார்.

யாழ் மாவட்டத்தில் சிங்களவர்களுக்கான பாடசாலை ஆரம்பிக்கப்பட்டால் சிங்களவர்களது ஆதிக்கம் யாழில் மேன்மேலும் அதிகரித்துச் செல்லும். அரச காணிகளை கைப்பற்றும் அவர்களது முயற்சிகள் படிப்படியாக வளர்ச்சியடைந்து தமிழ் மக்களது காணிகளையும் பலவந்தமாக கைப்பற்றும் நடவடிக்கையும் ஏற்படும் என அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், வலிகாமம் வடக்கு முன்னரங்கப் பகுதியில் பலாலி படைத் தளத்தின் முன்னரங்க நிலைகளாக விளங்கும் ஒட்டகப்புலத்திலிருந்து வயாவிளான் ஊடாகத் தெல்லிப்பழைச் சந்தி வரைக்கும் அங்கிருந்து காங்கேசன்துறை வரை நிரந்தரத் தடுப்பு வேலிகளை இராணுவத்தினர் அமைத்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.




# 65 தமிழர் சொத்துக்களை சூறையாடும் சிங்களம்

– கந்தரதன்

இதனால் வலி.வடக்கில் பலாலி இராணுவத் தலைமையகத்தை அண்மித்த இடங்களில் உள்ள 23 கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர்வதற்கான சாத்தியங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

நிரந்தர தடுப்பு வேலிகளை அமைப்பதற்கான தூண்கள் இப்போது 'கொங்கிறீட்' போடப்பட்டு நடப்பட்டு வருகின்றன. இந்த பாதுகாப்பு வேலிக்குள் 23 கிராம அலுவலர் பிரிவுகள் அடங்கி உள்ளன. 7273 குடும்பங்களைச் சேர்ந்த 26281 பேர் இப்பகுதிகளில் மீள்குடியமர்வுக்காகக் காத்திருக்கின்றனர்.

பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டுவரும் பகுதிக்கு அப்பால் குறைந்தது ஒன்றரை வருடங்களுக்கு யாரை

**நிரந்தர தடுப்பு வேலிகளை அமைப்பதற்கான தூண்கள் இப்போது 'கொங்கிறீட்' போடப்பட்டு நடப்பட்டு வருகின்றன. இந்த பாதுகாப்பு வேலிக்குள் 23 கிராம அலுவலர் பிரிவுகள் அடங்கி உள்ளன.**

யும் அனுமதிக்கப் போவதில்லை என்று படையினர் தமக்குத் தெரிவித்திருக்கின்றனர் என மக்கள் சிலர் கூறுகின்றனர். இது உறுதிப்படுத்தப்படாத போதும், முன்னரங்குகளில் நிரந்தர வேலிகள் அமைக்கப்படுவதானது மக்களின் மீள்குடியமர்வு குறித்த பெரும் சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

வலி. வடக்கில் இருந்து 1990 ஆம் ஆண்டு மக்கள் இடம்பெயர்ந்தனர். போர் முடிந்ததன் பின்னர் இந்தப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 12 கிராம அலுவலர் பிரிவுகளில் மட்டுமே மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டனர். கடந்த வருட இறுதிக்குள் எஞ்சியவர்களும் மீளக்குடியமர்த்தப்படுவர் என்று அமைச்சர்களும் அதிகாரிகளும் தெரிவித்து வந்தனர். ஆனால் 2011 மே மாதத்தின் பின்னர் எந்தவிதமான மீள்குடியமர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இதேவேளை, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் புனரமைக்கப்பட்டு வரும் ஒட்டகப்புலம் கட்டுவன் வீதியின் இடையே உள்ள 4 கிலோ மீற்றர் தூரமும் இந்த பாதுகாப்பு எல்லை வேலிக்குள் அடங்குவதால் அதன் புனரமைப்பு வேலைகள் கைவிடப்பட்டுள்ளன.

அந்த 4 கிலோமீற்றர் வீதியையும் தனியாரின் காணிகளுக்கு ஊடாகப் புதிதாக அமைக்குமாறு படைத்தரப்பினரால் தெரிவிக்கப்பட்டுள்ளதாக புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டுவரும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதன் காரணமாகவே வீதிகளை அமைக்கும் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. புலம்பெயர் வாழ் எம் தமிழ் உறவுகளே! நாம் சிந்திக்கும் நேரமல்ல இது. சிந்தித்து செயற்படவேண்டிய நேரம். வரும் மார்ச் 5 அன்று சிங்கள வன்கொடுமைகளுக்கு எதிராக ஜெனிவாவில் ஒருமித்துக் குரல் கொடுப்போம் வாரீர்!

(சூறையாடல்கள் தொடரும்)

# தமிழர் தாயகத்தை இராணுவ மயமாக்கும் முன்னாள் இராணுவத் தளபதியின் நகர்வுகள்!

தாயகத்தில் இருந்து வீரமணி

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாண பாடசாலைகளில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் எவரும் எந்தவொரு நிகழ்விலும் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்காமல் சட்டங்களை இறுக்கியுள்ள வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, அரச ஆதரவுக் கட்சிகளின் அரசியல் பிரச்சாரங்களுக்கு வழியேற்படுத்திக் கொடுத்துள்ளார். மேலும் பாடசாலைகளுக்கு தானும் நேரடியாகச் சென்று மகிந்த புகழ்பாடி வருகின்றார்.

அரச ஒட்டுக்குழுவும், தமிழ் மக்களின் அழிவுக்கு துணைபோன கட்சியுமான ஈ.பி.டி.பி கட்சியினரும், கட்சி ஆதரவாளர்களும் பாடசாலைகளுக்குச் சென்று அரசியல் நடத்துவதற்கும் தமது அரசியல் செல்வாக்கை உயர்த்துவதற்கும் ஆளுநர் அனுமதி வழங்கியுள்ளார். இவ்வாறான செயற்பாடு தமிழ் மாணவர்களின் கல்வியை திட்டமிட்டு மழுங்கடிக்கும் நோக்கம் கொண்டதென்று யாழ்.மாவட்ட கல்வியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.



அன்று



இன்று

வடமாகாண பாடசாலைகளில் தற்போது மாணவர்களின் ஆற்றல் ஆளுமைகளை மேம்படுத்தும் இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இப்போட்டிகளுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களையோ, பிரதேச சபைத் தலைவர்களையோ அழைக்கக் கூடாதென்று ஆளுநர் சந்திரசிறி கோட்ட, வலய கல்விப் பணிப்பாளர்களுக்கும் அதிபர்களுக்கும் கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்நிலையில் யாழ்.மாவட்டத்தில் நடைபெற்ற சில பாடசாலைகளின் இல்ல மெய்வல்லுனர் போட்டிகளுக்கு ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் அழைக்கப்பட்டிருக்கின்றனர். கடந்த 16ம் திகதி கிளிநொச்சியில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுனர் போட்டியொன்றுக்கு ஆளுநர் சந்திரசிறியும் சென்றிருக்கின்றார். இதேவேளை இராணுவ அதிகாரிகளும் இவ்வாறான பாடசாலை நிகழ்வுகளுக்கு அழைக்கப்பட வேண்டும் என்று சந்திரசிறி அதிபர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

பாடசாலைகளில் நடைபெறுகின்ற இவ்வாறான நிகழ்வுகளுக்குச் செல்கின்ற இவர்கள் தனியே பாடசாலைகளின் வளர்ச்சி தொடர்பாக மக்கள் மத்தியில் உரையாற்றாமல் மகிந்த சிந்தனை தொடர்பாகவும், மகிந்தவின் அரசை தக்கவைப்பது தொடர்பாகவுமே உரையாற்றுகின்றனர். அதிலும் ஈ.பி.டி.பியினரின் நிலைப்பாடு வேறு. தமது கட்சியை வலுப்படுத்துமாறு அவர்கள் இவ்வாறான நிகழ்வுகளில் கோரிக்கை விடுக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே சரிந்துள்ள ஈ.பி.டி.பியினரின் செல்வாக்கை ஓரளவேனும் தூக்கி நிமிர்த்த வேண்டுமென்று டக்ளஸ் தேவானந்தா உடன்பாடொன்றை ஏற்படுத்தியிருப்பதாகவும், இதன் காரணமாகவே குடாநாட்டு பாடசாலைகளில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் அழைக்கப்படுவதாகவும், சில பாடசாலை அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் எவரிடமும் எந்தவொரு பாடசாலைகளும் உதவிகளைப் பெற்றுக்கொள்ளக் கூடாதென்றும் வடமாகாண ஆளுநர் உத்தரவிட்டுள்ளதாகவும் சில பாடசாலை அதிபர்கள் தெரிவிக்கின்றனர். கிராமப்புறங்களிலுள்ள பல பாடசாலைகள் இன்றுவரை உரிய தேவைகள் நிறைவேற்றப்படாத நிலையிலேயே இயங்கி வருகின்றன. குறிப்பாக கணணி, தளபாடங்கள், கற்றல், கற்பித்தல் உபகரணங்கள் போன்ற எவையும் இக்கிராமப்புறப் பாடசாலைகளுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படவில்லை. இதனால் இங்கு மாணவர்களின் கற்றல் பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பாடசாலைகளுக்கு கடந்த காலங்களில் தமிழ்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பன்முகப்படுத்தப்பட்ட நிதியூடாக நிதியுதவிகளை வழங்கியிருந்தனர். இதன் மூலம் இப்பாடசாலைகள் ஓரளவிற்கேனும் தமது வளப்பற்றாக்குறையை பூர்த்தி செய்தன. ஆனால் தற்போது ஆளுநரின் இறுக்கமான உத்தரவு காரணமாக இப்பாடசாலைகள் தமிழ்தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களிடம் எந்தவொரு உதவியையும் கேட்க முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

> **ஜெனிவாவில் இடம்பெறவுள்ள மனிதவுரிமைகள் அமர்வில் சிறீலங்காவிற்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுத் தீர்மானம் நிறைவேற்றப்படுமாயின் ஆளுநர் சந்திரசிறியின் தலையும் உருளும் என்பதை ஈழத்தமிழர்களும், புலம்பெயர்ந்த தமிழ் மக்களும் நன்றாக அறிந்து வைத்திருக்கவேண்டும். ஏனெனில் இலங்கையில் மோசமான, கொடூரமான இராணுவத் தளபதிகளின் பட்டியலில் சந்திரசிறியின் பெயரும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது.**

மேலும் ஒரு சில பாடசாலைகள் தமது பழைய மாணவர் சங்கங்களூடாக தமிழ்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் உதவிகள் பெற்று பாடசாலைகளுக்கு வழங்கியதை அறிந்த சந்திரசிறி இதற்கும் முற்றுப்புள்ளி வைத்துள்ளார். சிறீலங்காவின் கல்வியமைச்சருடன் உரையாடி புதிய சுற்றுநிருபமொன்றையம் நாடளாவிய ரீதியாக வெளியிடுவதற்கு இவர் தூண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பழைய மாணவர் சங்கங்களும் உதவிகளைப் பெற முடியாத சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

அதாவது பழைய மாணவர் சங்கங்கள் அனைத்தும் நேரடியாக பாடசாலை அதிபரின் கீழ் இருக்கவேண்டும் என்று சுற்று நிருபங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதனை இறுக்கமாக கடைப்பிடிக்குமாறும் பாடசாலை அதிபர்கள் வற்புறுத்தப்பட்டுள்ளனர். இதுவரை பழைய மாணவர் சங்கங்கள் அனைத்தும் முற்று முழுதாக பழைய மாணவர்களாலேயே நிர்வகிக்கப்பட்டன. அதாவது தலைவர், செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட முக்கியமான பொறுப்புக்கள் அனைத்தும் பழைய மாணவர்களிடமே இருந்தன.

ஆனால் தற்போதைய சுற்றுநிருபத்தின்படி பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக பாடசாலை அதிபரே இருக்கவேண்டும், அத்துடன் பொருளாளராகவும் பாடசாலை ஆசிரியர்களில் எவரேனும் ஒருவரே இருக்கமுடியும், செயலாளர் உள்ளிட்ட ஏனைய பொறுப்புக்களையே பழைய மாணவர்கள் வகிக்கமுடியும். இதனால் கடந்த காலங்களைப்போன்று சுயாதீனமாக செயற்பட முடியாத நிலை தங்களுக்கு ஏற்பட்டுள்ளதாக பழைய மாணவர் சங்கங்கள் கூறியுள்ளன.

தமிழ் மக்களின் கல்வியைத் திட்டமிட்டு அழிப்பதற்கு சிங்களம் திடசங்கற்பம் பூண்டு நிற்பதையே இவ்வாறான செயற்பாடுகள் எடுத்துக் காட்டுவதாக குடாநாட்டுக் கல்விச் சமூகம் தெரிவித்துள்ளது. இதுவரை காலமும் அரசியலுக்கு அப்பால் சென்று அனைத்து அரசியல்வாதிகளுடனும் நட்புறவுகளைப் பேணி தமது பாடசாலைகளை வளம்படுத்திய அதிபர்கள், இன்று வடமாகாண ஆளுநரின் அடாவடித்தனமான செயற்பாடுகளால் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

முன்னர் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியாக இருந்து தமிழ் மக்களை குறிப்பாக ஏராளமான தமிழ் இளைஞர்களைக் கொன்று குவித்தவரும், பல தமிழ்ப் பெண்களின் தாலிகளும் மானங்களும் பறிபோவதற்கு காரணமாக இருந்தவருமான மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி இன்று யாழ்ப்பாணம் உட்பட வடக்குமாகாணம் பூராகவும் இராணுவ ஆட்சியையே நடத்தி வருகின்றார்.

அரச ஒட்டுண்ணியாகிய டக்ளஸ் தேவானந்தாவின் அடியாட்கள் தனக்குப் பின்னால் சுற்றுகிறார்கள். இவர்களையும் இராணுவத்தினரையும் பயன்படுத்தி தமிழ் மக்களை பணியவைக்கலாம் என்ற அசட்டுத்துணிவும் சந்திரசிறியிடம் காணப்படுகின்றது. இதனாலேயே வடக்கில் இவரின் அராஜகங்கள் அதிகரித்துச் செல்கின்றன.

ஜெனீவாவில் இடம்பெறவுள்ள மனிதவுரிமைகள் அமர்வில் சிறீலங்காவிற்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுத் தீர்மானம் நிறைவேற்றப்படுமாயின் ஆளுநர் சந்திரசிறியின் தலையும் உருளும் என்பதை ஈழத்தமிழர்களும், புலம்பெயர்ந்த தமிழ் மக்களும் நன்றாக அறிந்து வைத்திருக்கவேண்டும். ஏனெனில் இலங்கையில் மோசமான, கொடூரமான இராணுவத் தளபதிகளின் பட்டியலில் சந்திரசிறியின் பெயரும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது.

(18ம் பக்கம் பார்க்க)

BEST SEA FOOD
(S.A.R.L - SANTHOSH - Import Export)
மீன்வகைகள் அனைத்தும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள இங்கே நாடவும்
17 Rue Perdonnet, 75010 PARIS Tel : 01 44 65 34 18
06 46 84 23 69
Gare de Nord - La Chapelle

The First & Best Tamil Tailors in Paris
GOUNA TAILORS
11 வது ஆண்டில்
பாரிஸ் நகரில் தமிழரின் முதல்தரமான தையலகம்.
8 RUE CAIL 75010 PARIS
TÉL : 01 42 05 03 95

GOWRI-VILLAS
Spécialitées Indiene & Srilankaise
பிறந்த நாள், திருமணம் மற்றும்
உங்கள் வைபவங்கள் எதுவாகினும்
சைவ, அசைவ உணவுகள்,
பலகார வகைகள் உங்கள் தேவைக்கேற்ப பெற்றுகொள்ள...
53, rue Louis Blanc, 75010 PARIS
Tél : 01 42 05 72 65

Blanc Mesnil - Drancyயில் தமிழர்களுக்கான புதிய உதயம்
NARU COIFFURE
21, AV DE LA REPUBLIQUE
93150 LE BLANC MESNIL
06 59 49 16 80
RER: B - DRANCY

Ocean Indien
30 யூரோவுக்கு மேல் பொருட்கள் வாங்கினால் 5% சிறப்புக்கழிவு
195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE
Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60

Garage Mahendran
திருத்த வேலைகள்,
Carosserie வேலைகள்,
மற்றும் வாகன உதிரிப்பாகங்கள் விற்பனைக்குண்டு.
85-87, rue de Strasbourg, 93200 St Denis
Tél.: 01 48 21 93 31 / 06 17 91 47 66
Hôpital Delafontaineக்கு அருகாமையில்
Lundi au Samedi 8h30 à 19h

Sport சாரதி பயிற்சி நிலையம்
புள்ளிகள் பறிக்கப்படுவதைத் தடுக்கவும்,
இழந்த புள்ளிகளை மீளப்பெறவும்
Sport Auto Ecole - 4, rue de Jules Ferry, 95400 Villiers Le Bel
Tél.: 01.39.94.10.28 / 06.13.38.85.50

S.P.RAJU JEWELLERY
வாடிக்கையாளர்களுக்கு சிறப்புச் சலுகைகளை வழங்கிவரும் நாம் பிறந்திருக்கும் 2012 இப்புதுவருடத்தில் தங்கநகை சேமிப்புத் திட்டத்தை ஆரம்பிக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
13 rue du Fbg St Denis 75010 Paris. Tél: 01 58 20 17 33
13 rue cail 75010 Paris Tél: 01 46 07 43 42

KABISHA IMMOBILIER
வீடு வாங்குதல், விற்றல், வாடகை, மற்றும் கடன் வசதிகளும்
பொ. கண்ணதாசன்
அலுவலக நிர்வாகி
122, Avenue du Maréchal Leclerc - 93330 Neuilly sur Marne
Tél.: 01 43 81 99 46 - Fax: 09 70 62 70 36
email: kannathasan-kabishaimmobilier@hotmail.fr
www.kabishaimmobilier.com
FNAIM

ASIAN WEDDING PLANNER
Pour toutes vos réception dans le plus beaux salons
Décoration Florale
Location De Salle
Traiteur
Animation DJ
Location de Matériel
Service de Restauration
Video & Photo
Contact : Bernard (Ravi) : 06 03 46 89 87 - Jeeva : 06 43 30 45 88

தன இலட்சுமி மஹால்
THANAA LAKSHMI MAHAL Textiles & Jeweleries
Tél.: 01 48 36 40 75 - Port 06 50 17 51 91 - Fax: 01 79 64 12 61
122, Av P.V. Couturier - 93120 La Courneuve

Nila Cash & Carry
Noisiel, Torcy, Lognes, Noisy Champs வாழ் மக்களுக்காக....
8, Allée Boris Vian - 77186 Noisiel
Tél: 09 51 89 69 80
இலங்கை, இந்திய, ஆபிரிக்க மற்றும்
ஆசிய மளிகைப்பொருட்கள்,
மரக்கறி வகைகள்,
கடல் உணவு வகைகள்,
தொலைபேசி அட்டைகள்
Noisiel RERக்கு முன்பாக,
Mairie Annexe du Luzard, Police Municipale, Hotel Hipotel Marne la vallée

# போலி நம்பிக்கைகளின்.....

மனிதநேயக் களத்திலும், இராசதந்திரக் களத்திலும் பெரும் இக்கட்டிற்கு ஆளாகியிருந்த நிலையில், போர்நிறுத்தத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சியாக, நோர்வேயும், இந்தியாவும் விடுத்த சமிக்ஞைகளுக்கு இணங்க வெளிநாட்டில் தமது அதிகாரபூர்வ பிரதிநிதி ஒருவரை நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைக்கு ஏற்பட்டிருந்தது.

தேசத்தின் குரல் பாலா அண்ணையின் மறைவைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகராகும் கனவில் திளைத்திருந்து, அது கைகூடாத நிலையில் இயக்கத்தின் முதன்மை வெளிநாட்டுப் பிரதிநிதியாகும் கற்பனையில் காகிதக் கப்பலோட்டிக் கொண்டிருந்த உருத்திரகுமாரனை ஒரு பொருட்டாக தமிழீழ தேசியத் தலைவர் அவர்


தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers of Tamil Eelam

LTTE Headquarters
Tamil Eelam
2009-01-12

Hon. Abhisit Vejjajiva
Prime minister
Kingdom of Thailand

May it please your Excellency!

I take great pleasure in letting you know that our organisation has appointed Mr. Selvarasa Pathmanathan, a senior representative of our organisation, as the Head of our newly constituted Department of International Relations. In this capacity, he will also function as chief diplomat and negotiator on behalf of our organisation from now onwards.

we have felt the large void that has existed since the demise of our political advisor and chief negotiator, Mr Anton Balasingham, in initiating and developing diplomatic relations with international actors. We also understand the necessity for a high profile representative of our organisation to be working abroad with the required mandate from the leadership in order to move forward in the diplomatic arena. For these reasons, we have now released Mr. Selvarasa Pathmanathan from other responsibilities, and he has taken charge of new department with effect from 1st of January 2009.

I hope that Mr. Selvarasa Pathmanathan's appointment of chief diplomat and negotiator for our organisation will help to facilitate the effective engagement of diplomatic means towards finding a just political solution for the Tamil national question.

Yours Sincerely

(V.Pirapaharan)
Leader,
Liberation Tigers of Tamil Eelam

கள் எடுக்காத நிலையில், உருத்திரகுமாரன் குழுவினரின் நம்பிக்கை நட்சத்திரமாக அப்பொழுது கே.பி அவர்களே விளங்கியிருந்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தையாளராகும் கே.பியின் கோரிக்கையை ஏற்பதற்கு 2008 டிசம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் பெரும் தயக்கம் காட்டிய தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள், டிசம்பர் மாதத்தின் இறுதியில் யுத்த களத்திலும், மனிதநேயக் களத்திலும், இராசதந்திரக் களத்திலும் ஏற்பட்டிருந்த நெருக்கடிகளைக் கருத்திற் கொண்டு தனது முடிவு மீளாய்வுக்கு உட்படுத்தினார். தமது இயக்கத்தின் தலைமைப் பேச்சுவார்த்தையாளராக கே.பியை நியமிப்பதால் ஏற்படக் கூடிய சாதக – பாதக நிலைகள் பற்றி தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், அனைத்துலக தொடர்பகப் பொறுப்பாளர் வீ.மணிவண்ணன் ஆகியோருடன் டிசம்பர் மாதத்தின் கடைசி நாட்களில் ஆழமாக மந்திராலோசனைகளை நிகழ்த்திய தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள், கே.பியை தமது இயக்கத்தின் வெளியுறவுத் தொடர்பாளராக நியமிப்பதற்கு முடிவு செய்தார்.

இம்முடிவை தொலைபேசி வாயிலாக கே.பியிடம் தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் தெரியப்படுத்தினார். இதுவே தமிழீழ தேசியத் தலைவருக்கும், கே.பியிற்கும் இடையில் இறுதியாக நடைபெற்ற தொலைபேசி உரையாடலாகவும் அமைந்தது. இதன் பொழுது ஒரு விடயத்தை தேசியத் தலைவர் அவர்கள் தெளிவாக எடுத்துக்கூறியிருந்தார். அதாவது வெளிநாடுகளில் தமது இயக்கம் வழமையாக முன்னெடுக்கும் சகல பணிகளும் தொடர்ந்தும் வீ.மணிவண்ணன் அவர்களின் பொறுப்பிலேயே இடம்பெறும் என்றும், போர்நிறுத்தத்தைக் கொண்டு வந்து, வன்னியில் ஏற்பட்டுள்ள மனிதநேய நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கு அனைத்துலக சமூகத்தின் உதவியைப் பெறுவதற்கான அரசியல் வேலைகளை மட்டுமே கே.பி அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் தேசியத் தலைவர் அவர்கள் வலியுறுத்திக் கூறியிருந்தார்.

இவற்றுக்கு அப்பால் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுக் கட்டமைப்புக்களை மாற்றியமைப்பதற்கோ, வெளிநாடுகளில் உள்ள தமது இயக்கத்தின் உறுப்பினர்கள் – செயற்பாட்டாளர்களை வழிநடத்துவதற்கோ, அன்றி மக்களை அணிதிரட்டுவதற்கோ எவ்வித அதிகாரமும் கே.பி அவர்களுக்கு தமிழீழ தேசியத் தலைவரால் வழங்கப்படவில்லை. அதேநேரத்தில் 2003ஆம் ஆண்டிற்கு முன்னர் அனைத்துலக வலையமைப்பிற்கு கே.பி பொறுப்பாக விளங்கிய பொழுது அவருடன் இயங்கிய உருத்திரகுமாரன் போன்றோருடன் இணைந்து போர்நிறுத்தத்தைக் கொண்டுவரும் பணிகளை கே.பி மேற்கொள்வதற்கும் தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் தடைவிதிக்கவில்லை.

கே.பியின் இந்நியமனத்தை 2008 ஆம் ஆண்டின் இறுதி நாட்களில் – சிங்களப் படைகளிடம் கிளிநொச்சி வீழ்ச்சிகாண்பதற்கு ஓரிரு நாட்களுக்கு முன்னர் – தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் மேற்கொண்டிருந்தாலும், இதற்கான கையொப்பமிடப்பட்ட அதிகாரபூர்வ கடிதம் 12.01.2009 அன்றே கே.பி அவர்களுக்கு வன்னியிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

ஆனாலும் இச்செய்தி உடனடியாகவே வெளிநாடுகளில் பரவத் தொடங்க, கே.பியைச் சுற்றி ஓர் கும்பல் சூழத்தொடங்கியது. கே.பியின் பினாமியாக விளங்கிய மனோ (பிரான்ஸ்), அவரது நிதிப்பொறுப்பாளரான சார்வே (நோர்வே), றோ அமைப்பின் முகவராகக் கருதப்படும் இளங்கோ (பிரான்ஸ்), முரளீதரன் (கனடா) பரந்தன் ராஜனுடன் நெருங்கிய தொடர்பைப் பேணி வந்த உருத்திரகுமாரன், அவரது உதவியாளரான வழுதி, ஜோய் மகேஸ்வரன் (அவுஸ்திரேலியா), இரேணியஸ் செல்வின் (நோர்வே), பாஸ்கரன் (நோர்வே) என கே.பியின் தலைமையில் ஓர் கும்பல் வெளிநாடுகளில் இயங்கத் தொடங்கியது. இக்கும்பலுக்கு பக்கபலமாக பிரித்தானியாவில் இருந்து ஒளிபரப்பாகும் தமிழ்த் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றின் பணிப்பாளர்களும் இணைந்து கொண்டனர்.

போர்நிறுத்தத்தைக் கொண்டு வருவதற்கான அரசியல் வேலைகளை முன்னெடுப்பதைவிட, அமெரிக்காவின் மீட்புக் கப்பலை வன்னிக்கு அனுப்புவது உட்பட தமிழீழத் விடுதலைப் புலிகள் மீதும், தமிழீழ மக்களின் நலன்களிலும் உலகம் கொண்டிருந்ததாகக் கூறப்பட்ட கரிசனை பற்றிய போலியான நம்பிக்கையை ஊட்டக்கூடிய செய்திகளை வன்னியில் விதைத்து, தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை முள்ளிவாய்க்கால் வரை அழிவுக்கு இட்டுச்செல்வதே கே.பியின் தலைமையில் ஒன்றிணைந்த இக்குழுவின் நோக்கமாக இருந்தது எனக் கூறின் மிகையில்லை. இதனை நிரூபணமாக்கும் வகையிலான கடிதம் ஒன்று கே.பியின் ஆலோசகராக விளங்கியவரும், உருத்திரகுமாரனின் நண்பருமான பாஸ்கரன் என்பரால் 06.01.2009 அன்று ஒஸ்லோவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

கடந்த தொடரில் எம்மால் வெளிக்கொணரப்பட்ட 26.12.2008 திகதியிடப்பட்ட இவரது முன்னைய கடிதத்தைவிட மிகவும் ஆபத்தான – போலி நம்பிக்கைகளை ஊட்டக்கூடிய – கருத்துக்களை இக்கடிதம் உள்ளடக்கியிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியுறவுத் தொடர்பாளராக கே.பி நியமிக்கப்பட்டு, அவருடன் உருத்திரகுமாரனும் அவரது சகபாடிகளும் இணைந்து கொண்ட ஓரிரு நாட்களில் இக்கடிதம் வன்னியைச் சென்றடைந்தமை இதன் இன்னோர் அம்சமாகும்.

*(தொடரும்)*

## விடுதலைப் புலிகள் பெண்களிற்கு ஆளுமையையும் அதிகாரத்தையும் கொடுத்திருந்தார்கள்

### கனடிய செனட்டர்

தமிழீழ விடுதலைப்புலிகள் தங்கள் இனப் பெண்களிற்கு அதிகாரத்தையும் ஆளுமையையும் தாராளமாகக் கொடுத்திருந்தார்கள் என்று இலங்கை விவகாரங்களில் அதீதமாக ஈடுபட்டுவரும் கனடிய செனட்டர் திருவாட்டி மொபினா ஜபார் தெரிவித்தார். கனடிய மனிதவுரிமை மையம் கனடிய நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கும் செனட்டர்களிற்குமென நடாத்திய மாநாட்டில் மனிதவுரிமை மாநாட்டில் கலந்து கொண்ட மேற்படி செனட்டரின் உரை நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரையும் கவர்ந்ததுடன் அனைவருமே அவரது உரையின் சிறப்பை அவரிடம் தெரிவித்து பாராட்டினர். இலங்கைக்கு சமாதான காலத்திலும் தற்போதும் பல தடவைகள் பயணம் செய்த மொபினா ஜபார் அவர்கள் களநிலைமைகளை தெளிவுபட எடுத்துக் கூறியதுடன் பேச்சுவார்த்தை மூலமான ஒரு தீர்விற்கான அவசியம் அங்கேயிருப்பதையும் சூடானிற்காக கனடாவின் பிரதிநிதியாக இருந்த இந்தச் செனட்டர் சுட்டிக் காட்டினார்.

குறிப்பாக பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட விடுதலைப் புலிகளின் பெண்கள் குழுவினர் தங்கள் முடிவுகளை தாங்களே எடுக்கும் அதிகாரமும் ஆளுமையும் கொண்டவர்களாக இருந்தார்கள் என்றும் ஆனால் அரச தரப்பில் கலந்து கொண்ட பெண்களோ தங்களின் முடிவிற்காக மேலிடத்தின் பதிலிற்காகக் காத்திருந்தார்கள் என்பதையும் சுட்டிக் காட்டினார். இலங்கையிலுள்ள பெண்களுடன் தொடர்ந்து வேலைத்திட்டங்களில் தான் ஈடுபட்டு வருவதால் கனடிய மனிதவுரிமை மையத்தின் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கு தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பெருமையாகக் கருதுவதாகவும் தெரிவித்த செனட்டர் மொபினா ஜபார் அவர்கள், ஒரு போரின் முடிவில் ஒரு இணக்கப்பாடு ஏற்பட வேண்டுமென்பதே உலக நியதியாக இருப்பதைச் சுட்டிக் காட்டியதோடு எங்களிற்கு விருப்பமில்லாத ஒரு முடிவு போரின் முடிவில் ஏற்பட்டதையும் இனங்களிற்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான தேவை இன்னமும் நிறையவே இருக்கிறது என்பதையும் இன்னமும் தமிழினத்திற்கு எதிரான நிகழ்வுகள் தொடர்வதையும் தெரிவித்தார்.

பல போரியல் தேசங்களின் பேச்சுக்களை அவதானித்ததிலிருந்து இலங்கையில் இடம்பெற்ற விடுதலைப்புலிகள் - இலங்கை பேச்சுவார்த்தையிலேயே பெண்களிற்கு அதிகவுரிமை வழங்கப்பட்டிருந்ததை தான் உறுதிபடக் கூறமுடியுமெனவும், அந்தப் பேச்சு துரதிஸ்டவசமான ஒரு போரில் முடிவுற்றதையும் சுட்டிக்காட்டினார். கனடிய அரசில் மட்டத்தில் ஈழத்தமிழர் விவகாரத்தில் மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு உதவிய அமைப்பு என கனடாவின் சகல கட்சிகளினதும் பாராட்டைப் பெற்ற கனடிய மனிதவுரிமை மையத்தின் நிகழ்வுகளின் மூலம் இலங்கை சார்ந்த ஆதரவுச் செயற்பாடுகளில் ஈடுபட்ட அரசியல்வாதிகள் கூட மாற்றம் பெற்று தமிழர்களின் நலன்களிற்காக வாதாடும் நிலை உருவாகியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

கனடா - இலங்கை பாராளுமன்ற அமைப்பின் தலைவராக இருந்த பாராளுமன்ற உறுப்பினர், மற்றும் இலங்கை அரசின் குரலாக லிபரல் கட்சி ஆட்சியிலிருந்த காலத்தில் செயற்பட்ட ஒரு அரசியல்வாதி எனப் பலரும் தாங்கள் கனடிய மனிதவுரிமை மையத்தின் (www.chrv.ca) கற்கை மாநாடுகளின் மூலமே ஒரு தெளிவான நிலைப்பாட்டிற்கு வந்ததை எடுத்தியம்பினர். 2009ம் ஆண்டிலிருந்து ஈழத்தமிழர்களின் மனிதவுரிமை விவகாரங்களை கனடியர்களினதும், சர்வதேச சக்திகளினதும் கவனத்திற்கு எடுத்து செல்லும் கனடிய மனிதவுரிமை மையமானது கனடாவிலுள்ள ஏனைய தமிழ் அமைப்புக்களை ஒரே குடையின் கீழ் இணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் இலங்கை அரசினதும் பேச்சு நடவடிக்கைக்கு கனடாவின் காத்திரமான பங்கு மூலம் வலுச்சேர்க்கும் நடவடிக்கையிலும் தன்னை ஈடுபடுத்தியுள்ளது.

தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் பிரான்சு
Association de Tamoulcholai France

பாரிசு 10-02-2012

தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் பதினோராவது நடவையாக (தமிழ் கல்வி மேம்பாட்டுப் பேரவையுடன் இணைந்து) நடாத்தும் கல்வியாண்டு 2011-2012 இற்கான தமிழ்மொழித் தேர்வுகளின் விபரங்கள்,

எழுத்துத்தேர்வு : 02-06-2012 சனிக்கிழமை

புலன்மொழி வளத்தேர்வு : 12-05-2012 சனிக்கிழமை, 13-05-2012 ஞாயிற்றுக்கிழமை

விண்ணப்ப முடிவு நாள் : 26-02-2012

தொடர்புகளுக்கு:
தலைமைப் பணியகம்
Tamoulcholai
28 place de la Chapelle
75018 Paris
தொலைபேசி. 01 42 05 93 76

Association de Tamoulcholai France, 28 place de la Chapelle, 75018 Paris. Tél : 01 42 05 93 76
-La loi du 1 juillet 1901- N°J'ordre :99/3373 N°dossier :141889P



# சிட்னி மைதானத்தில் பறந்த தமிழீழத் தேசியக் கொடி

இலங்கையில் தமிழர்களின் சொந்த மண்ணில் தமிழீழத் தேசியக்கொடி பறப்பதனை தனது ஆயுத பலத்தின் மூலம் சிறீலங்கா தடுத்திருந்தாலும், உலகெங்கும் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்கள், சிறீலங்காவின் சிங்கள மக்கள் கூடியிருக்கும் இடத்தில்கூட தமிழீழக் கொடி பறக்கவிடுவதைத் தடுக்கமுடியாது என்பதை அவுஷ்திரேலியாவில் இன்னொரு இளைஞர் நிரூபித்துள்ளார்.



முன்னர் கனடாவில் சிறீலங்கா விளையாடிய கிரிக்கெட் மைதானத்தில் தமிழீழத் தேசியக் கொடியுடன் சென்று சிங்கள தேசத்தை அதிரவைத்தார் ஒரு இளைஞர். பின்னர் பிரித்தானியாவிலும் இந்த அதிர்ச்சியைச் சந்தித்த சிறீலங்கா மீண்டும் அவுஸ்திரேலியாவில் கடந்த வாரம் அதிர்ந்துபோயுள்ளது.

அவுஸ்திரேலியா சிட்னி நகரில் சிறீலங்கா - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையில் துடுப்பாட்டப் போட்டி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது பார்வையாளர்களாகச் சென்ற இளைஞர் ஒருவர் தமிழீழத் தேசியக்கொடியை பிடித்துக்கொண்டிருந்துள்ளார். சிங்களக் கொடிகளுக்கு மத்தியில் பட்டொளி வீசிப் பறந்த கொடியைப் பார்த்து அதிர்ச்சியடைந்தவர்கள் காவல்துறையினருக்கு முறையிட்டுள்ளனர்.

இனி அங்கு தமிழீழத் தேசியக் கொடியுடன் சென்ற இளைஞர் கூறுவதைக் கேளுங்கள்....

நாங்கள் தமிழர்கள். நாங்கள் தமிழீழத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் துணிவுடனும் பெறுமையோடும் துணிந்து போராடுவோம் என்று சொல்வதற்காக எங்களுடைய தமிழீழத் தேசியக் கொடியை அங்கு பறக்கவிட்டேன். பல ஊடகங்களில் எமது கொடியை கவால்துறையினர் பறித்ததாக செய்தி வெளியிட்டுள்ளன. ஆனால்



அங்கு அவ்வாறு நடைபெறவில்லை பல ஆயிரக் கணக்கான சிங்களவர்களின் மத்தியில் தேசியக் கொடியை பறக்கவிட்டேன். கொடியை பார்த்த சிங்களவர்கள் காவல்துறையினருக்கு அறிவித்தனர். பின்பு காவல்துறை என்னிடம் கூறியது துடுப்பாட்டத்தை பார்வையிடுவதென்றால் கொடியை தம்மிடம் தரலாம் இல்லை என்றால் தம்முடன் பேசுமாறு கேட்டுகொண்டனர். எமது தமிழீழ அழிப்பை பற்றி காவல்துறையிடம் எடுத்துக் கூறினேன். அதற்குப் பின்னர் எமது செயலுக்காக காவல்துறை எங்களை பாராட்டியது. ஆனால் பல ஆயிரக்கணக்கான சிங்களவர்கள் மத்தியில் நாங்கள் தேசியக்கொடியை பறக்க விடுவதால் பிரச்சனைகள் வரலாம் என்று கூறினர்.

ஆனால் நாங்கள் இங்கு பிரச்சனைகளை ஏற்படுத்த வரவில்லை எங்களது போராட்டத்தை எடுத்து சொல்வதற்காகவே இங்கு வந்தோம், எடுத்தும் காட்டிவிட்டுடோம். ஆனால் எங்களுடைய கொடியை நாங்கள் யாரிடமும் கொடுப்பதற்கு தயார் இல்லை. நாங்களாகவே வெளியேறுகின்றோம் என்று காவல் துறையினருக்கு தெரிவித்தோம்.

எமது நாட்டில் 60 வருடங்களுக்கு மேல் சிறீலங்கா இராணுவம் தமிழின அழிப்பை செய்து கொண்டு வருகின்றான். ஆனால் உலக நாடுகளை ஏமாற்றி தமிழர்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லை என்று




சொல்கின்றான். துடுப்பாட்ட போட்டியில் தமிழர்களும் சிங்களவர்களும் ஒன்றுதான் என்று சுட்டிக் காட்டுகின்றான். ஆனால் நான் சிறீலங்கன் இல்லை, நான் தமிழன். பல இலட்சக் காணக்கான தமிழ் மக்களை கொன்று இன அழிப்பு செய்த சிறீலங்காவுக்கு நாங்கள் ஒரு போதும் ஆதரவு கொடுக்க மாட்டோம்.

தமிழீழத்தில் எமது தேசியக் கொடியை பறக்கவிடவில்லை என்றாலும் புலத்தில் தமிழர்கள் வாழ்கின்ற எல்லா இடங்களிலும் பறக்கும். அதேபோல ஒரு நாள் ஐ.நாவிலும் தமிழீழத் தேசியக் கொடி பறக்கத் தான் போகிறது. நான் எல்லா இளைஞர்களுக்கும் கூறவிரும்புகின்றேன். சிறீலங்கா அரசாங்கம் எந்த சதித் திட்டங்களை கொண்டுவந்தாலும் எந்த விதத்திலும் எதிர்த்தாலும் நாங்கள் தமிழர்கள் என்று சொல்வதற்கோ எமது தேசியக் கொடியை பறக்க விடுவதற்கோ ஒரு போதும் தயங்கக் கூடாது" என்று அந்த இளைஞர் தெரிவித்தார்.

# 17வது நாளாகத் தொடரும் நீதிக்கான பயணம்

தமிழர் தாயகத்தில் சிங்கள பேரினவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையிடம் மார்ச் 5ம் திகதி நீதி கேட்பதற்காக பெல்ஜியத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட நீதிக்கான நடைப்பயணம் லுக்சம்பேர்க் ஊடாக ஜேர்மனியை அடைந்து அங்கிருந்து தற்போது பிரான்ஸ் ஸ்தார்ஸ்பேர்க்




ஊடாக முளூஸ் நகர் நோக்கி தணியாத தாகத்துடன் தளராத உறுதியுடன் இன்று 21ம் திகதி செவ்வாய்கிழமை 17வது நாளாகவும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

வீதிகளில் பயணித்த மக்களிடம் துண்டுப்பிரசுரங்களையும் அஞ்சல் அட்டைகளையும் விநியோகித்தபடி பெல்ஜியத்தில் இருந்து ஜெனீவாவிற்கான



பயணத்தில் அரைவாசித் தூரங்களை, அதாவது சுமார் 530 கிலோ மீற்றர் தூரத்தை தற்போது கடந்து நடந்துகொண்டிருக்கின்றனர்.

நடைபயணப் பாதைகளில் ஊடகவியளாளர் பலர் இவர்களை சந்தித்து போராட்டத்திற்கான காரணங்களை கேட்டறிந்து நேர்காணலையும் எடுத்துச் சென்றுள்ளனர். அத்துடன், இவர்கள் நடை பயணம் மேற்கொள்ளும் இடங்களுக்கு சென்று இவர்களுக்கு ஆதரவாக மக்களும் நடைபயணத்தில் பங்கேற்றுள்ளனர். இப்பயணத்தில் பங்கேற்ற ஒருவர், எதிர்வரும் மார்ச் மாதம் 5ம் திகதி ஜெனீவா மனித உரிமைகள் முன்றலில் நடைபெறும் மாபெரும் ஒன்றுகூடலில் பங்கேற்பதற்கு



அனைத்துத் தமிழ் மக்களும் தயாராகவேண்டும் என்றும், அன்றைய தினம் பாடசாலையாக இருந்தாலும் அதற்கு சமுகமளிக்காது போராட்டத்தில் பங்கேற்கவேண்டும். இதன்மூலம் பாடசாலைக்கு மாணவர்கள் ஏன் வரவில்லை என்று காரணம் கேட்டால் தமிழ் மக்கள் மீது சிங்களப் பேரினவாதம் கட்டவிழ்த்துவிட்ட இனப்படுகொலையையும் அதற்காக தமிழ் மக்கள் நடத்துகின்ற போராட்டங்களையும் விளக்கவேண்டும் என்று வலியுறுத்தினார்.


ஐ.நாவின் மனித உரிமைகள் சபை அமர்வை நோக்கி
உலகத்தமிழ் மக்களின் மாபெரும் பேரணி
" ஒரு பலம் வாய்ந்த சர்வதேச சக்தியாக அணிதிரண்டு, எமது மக்களின் விடிவுக்காக உலகத் தமிழினம் உரிமைக்குரல் எழுப்ப வேண்டும் "
- தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் -
05.03.2012
புறப்படும் நேரம் 8h11
Gare de Lyon
65€
Genève
WALK FOR JUSTICE
TGV
Lyria
வந்தடையும் நேரம் 21h57
தமிழ் இனப்படுகொலைக்கு எதிராக நீதி கேட்டு, ஐ.நா முன்றலில் அணிதிரளும் ஐரோப்பியத் தமிழர்களுடன், பிரான்சு வாழ் தமிழீழ மக்களும் இணைந்து கொள்வதற்கு, பிரான்சில் Gare de Lyon இருந்து முதற்தடவையாக தமிழரின் தொடர்வண்டி (கடுகதிச் சேவை TGV) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
உங்கள் பயணச்சீட்டுகளை உடனடியாகப் பெற்று உங்கள் வருகையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
தொடருந்து புறப்படும் நேரத்திற்கு ஒரு மணித்தியாலம் முன்பாக தொடருந்து நிலையத்திற்கு சமூகமளித்தல் வேண்டும்.
தொடர்புகளுக்கு - தமிழர் ஒருங்கிணைப்புக் குழு 01 43 58 11 42
தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பு 06 14 11 46 10 , 07 51 50 86 75
தமிழ்ச்சங்கங்கள் , தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் உப அமைப்புகள்


அம்மா பகவான் சரணம்
ஸ்ரீ பகவானின் ஜென்மதினத்தை முன்னிட்டு எதிர்வரும் 07.03.2012 புதன்கிழமை மாலை 4.00 மணி முதல் இரவு 11.00 மணி வரையில் பாதுகா அபிஷேகத்துடன் ஸ்ரீ பகவானின் SKYPE தர்சனமும் கூட்டுப் பிரார்த்தனையும் இடம் பெறவுள்ளதால் பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு ஸ்ரீ அம்மா பகவானின் ஆசியை பெற்று சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.
இடம் :
OSHWAL HOUSE, 1 CAMPBELL ROAD,
CROYDON, SURREY CR0 2SQ
மேலும் தொடர்புகளுக்கு
074 6681 6547 - Mitcham
079 4469 7912 - Mitcham
077 2579 7720 - Catford
079 1955 1646 - Harrow
077 2346 7012

## VANNI BOUCHERIE

லா சப்பலில் உங்களை வரவேற்கின்றது.



வன்னி இறைச்சிக்கடை

26 rue perdonnet 75010 Paris
M°: La chapelle / Gare du nord
Tél : 01 40 36 15 63 / Port: 06 68 96 43 16

## DRANCY மக்களின் நன்மதிப்பைப்பெற்ற சிகையலங்கார நிலையம்

## M.G.A COIFFURE

முடிவெட்ட 7€



20 rue Roger Salengro, 93700 Drancy
திரைசறி பப்ளிசிக்கு முன்னால்
Bus : 146/148 Arrêt : Georges Ducerf
Tel : 06 66 66 06 13

## வர்த்தகம் மூலதனம்

ஜெகன்

# நொக்கியா லூமியா 900

நொக்கியா மற்றும் விண்டோஸ் நிறுவனங்கள் இணைந்து ஏற்கனவே இரண்டு செல்பேசிகளை வெளியிட்டன. அவை நொக்கியா லுமியா 800, மற்றும் லுமியா 710 என்பவையாகும். மிகுந்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் வெளியாகிய போதிலும் இவற்றல் பெரிதாக எதனையும் சாதிக்க முடியவில்லை. மிகப்பெரிய இரு நிறுவனங்களின் கூட்டுத் தயாரிப்பாக இருந்தபோதிலும் ஐ–போன் 4s மற்றும் சாம்சுங் கெலக்ஸி எஸ் 2 ஆகியவற்றின் விற்பனையை முந்தமுடியவில்லை. இந்நிலையில் நொக்கியா தனது அடுத்த வெளியீடான நொக்கியா லுமியா 900 செல்பேசியை வெளியிட்டுள்ளது. இது தோற்றத்தில் லுமியா 800 ஐ ஒத்திருந்த போதிலும் சற்று பெரியது. விண்டோஸ் 7.5 மெங்கோ தொகுப்பின் மூலம் இயங்கும் இது, 8 மெகாபிக்ஸல் கமராவினையும் கொண்டது. இதனைத்தவிர 4.3 அங்குல AMO LED திரையைக் கொண்டுள்ளது.



# சிறீலங்கா மீதான தடையால் இலாபமடையும் இந்தியா!

சிறீலங்காவின் தேங்காயை இறக்குமதி செய்வதற்கு வளைகுடா நாடுகள் சென்ற ஆண்டில் தடை விதித்து விட்டன. இதனால் அந்த இடத்தை இந்தியா பிடித்துக்கொண்டு விட்டதாக கூறப்படுகின்றது. 2011ம் ஆண்டில் இந்தியாவில் இருந்து தேங்காய் ஏற்றுமதி, 2010ம் ஆண்டைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்து ஒலிவ் எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் முகம்மது அசரப் கூறுகையில், வளைகுடா நாடுகளில் தேங்காய்க்கான தேவைப்பாடு தொடர்ந்து உயர்ந்து வருகிறது. மாதம் ஒன்றுக்கு 6 கொன்டெய்னர்களில் தேங்காய்களை அங்கு அனுப்புகிறோம். வளைகுடா நாடுகள் சிறீலங்காவிலிருந்து தேங்காய் இறக்குமதி செய்வதற்கு சென்ற ஆண்டில் தடை விதித்து விட்டன. இதனால் இந்தியாவின் ஏற்றுமதி சூடுபிடித்தது என்றார்.

இதேவேளை, தென் மாநிலங்களில் தேங்காய் விளைச்சல் அமோக வளர்ச்சி அடைந்துள்ளது. பெரும்பாலும் தமிழகத்தில் பொள்ளாச்சி மண்டலத்திலுள்ள தென்னந்தோப்புகளிலிருந்து தேங்காய்களை வாங்குகிறோம். மேலும் தேங்காய் ஏற்றுமதியில் பல புதிய நிறுவனங்கள் களமிறங்கி வருகின்றன. இதனால் இப்பிரிவில் கடும் போட்டி உருவாகி வருகிறது. இதன் விளைவாக துபாயில் தமிழ்நாடு, கேரள மாநிலங்களின் தேங்காய்கள் குவிந்து கொண்டிருக்கின்றன. போட்டி அதிகரித்து விட்டதால் எமது நிறுவனத்தின் ஏற்றுமதியில் சற்றே பின்னடைவு ஏற்பட்டுள்ளது. முன்பு ஒரு கொன்டெய்னருக்கு 50, 000 தேங்காய்கள் என்ற அளவில் மாதம் ஒன்றுக்கு 15 கொன்டெய்னர்களை அனுப்பிக் கொண்டிருந்தோம். இப்போது இந்த எண்ணிக்கை பெரிதும் குறைந்து விட்டது என்று ஃபேர் எக்ஸ்போர்ட் இந்தியா நிறுவனத்தின் பொது மேலாளர் சஜீத் கூறினார்.



பொதுவாக ஒரு பொருள் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படும்போது, அந்த ஏற்றுமதி சந்தையில் அதன் விலை குறைவாக இருக்கும். அந்தப் பொருள் எங்கே இறக்குமதியாகிறதோ அங்கு விலை அதிகமாக இருக்கும். ஆனால் தற்போது தேங்காயைப் பொறுத்தவரை இந்த விதியில் தலைகீழ் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கேரளா மற்றும் தமிழகத்திலிருந்து தேங்காய் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. என்றாலும் ஏற்றுமதி செய்யும் இந்த இரு மாநிலங்களை விட இறக்குமதி செய்யும் துபாயில் தேங்காய் விலை குறைவாக உள்ளது. இந்த மாநிலங்களில் தேங்காய் ஒன்று 11 அல்லது 12 ரூபா என்ற அளவில் விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் துபாயில் ஒரு தேங்காய் 8 ரூபாவிற்கு விற்பனையாகிறது. பல ஏற்றுமதியாளர்கள் போட்டி போட்டுக் கொண்டு தேங்காய் ஏற்றுமதி செய்யத் தொடங்கினர். துபாயில் தேங்காய்களுக்கான தேவைப்பாடு அதிகமாக இருந்தாலும் அளவுக்கு மீறி வந்து குவிந்து கொண்டிருப்பதால் விலை சரிவடைந்துள்ளதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

# அப்துல் கலாமால் நின்றுபோன கமலின் கனவுப் படம்!





தனது கனவுப் படமான மருதநாயகம் படத்தை மீண்டும் தூசி தட்டுகிறார் கமல்ஹாசன். இதில் ரஜினிகாந்த்தையும் அவர் களம் இறக்கப் போவதாக தகவல்கள் அடிபடுகின்றன. 1997ம் ஆண்டு மிகுந்த விளம்பரத்துடன் ஆரம்பிக்கப்பட்டதுதான் மருதநாயகம். பிரித்தானிய மகாராணியே நேரில் வந்து பூஜையில் கலந்து கொண்டார். ஆனால் படம் ஆரம்பித்ததோடு நின்றுபோனது. காரணம், அப்துல் கலாம் காலத்தில் இந்தியா பொக்ரானில் வெடித்த அணுகுண்டு. இதன் காரணமாக இந்தியா மீது பொருளாதாரத் தடை பாய்ந்தது. இதனால், கமல் ஹாசன் நம்பியிருந்த வெளிநாட்டு நிதியுதவியும் தடைபட்டுப் போனது. எந்த நிறுவனமும் கமல் ஹாசனுக்காக 50 கோடி ரூபாவை முதலீடு செய்ய அன்று தயாராக இல்லை. இதை அவரே பல பேட்டிகளில் கூறி வந்தார். இந்த நிலையில் மீண்டும் மருதநாயகம் குறித்து கமல் பேச ஆரம்பித்துள்ளார். இம்முறை ஆச்சரியமூட்டும் வகையில், இப்படத்தில் தனது ஆருயிர் நண்பர் ரஜினியையும் இணைத்துக் கொண்டு களம் இறங்கப் போகிறாராம். இதை கமல்ஹாஸனே மும்பை நாளிதழுக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார். அதில், 'மருதநாயகத்தில் ரஜினிக்காகவே ஒரு பாத்திரம் உள்ளது. அவருக்கு மிகப் பொருத்தமாக இருக்கும். நாங்கள் இருவரும் 10 படங்களுக்கு மேல் இதற்கு முன் நடித்திருக்கிறோம். ஆனால் சமீபத்தில் எந்தப் படமும் சேர்ந்து நடிக்கவில்லை. இந்தப் படத்துக்கு எங்கள் இருவரையும் தவிர வேறு யாரும் பொருத்தமாக இருக்கவும் முடியாது. ரொம்ப நாள் பூனைக்கு மணி யார் கட்றதுன்னு (ரஜினி – கமல் சேர்ந்து நடிக்கும் படம்) யோசிச்சிக்கிட்டிருந்தாங்க... அதை நானே கட்டப் போறேன்,' என்று கூறியுள்ளார்.

கமல் கூறுவதைப் பார்த்தால் அவர்தான் மருதநாயகமாக நடிப்பார் என்று தெரிகிறது. படத்தின் முக்கிய வேடத்தில் ரஜினி நடிக்கலாம் என்று தெரிகிறது.

# பூணூலை அறுத்து வீசுவதாக காட்டுவதா?

### இயக்குநருக்கு கொலை மிரட்டல்

பூணூலை அறுத்து வீசுவதாக படத்தில் காட்டியதற்காக, திரைப்பட இயக்குநருக்கு தொலைபேசி மிரட்டல் விடப்பட்டுள்ளது. சத்யா-பவீனா இணைந்து நடித்து சமீபத்தில் திரைக்கு வந்துள்ள படம், 'சூழ்நிலை'. இந்த படத்தில், நிழல்கள் ரவி பிராமண வகுப்பை சேர்ந்தவராக முக்கிய வேடத்தில் நடித்துள்ளார். செந்தூரன் இயக்கியுள்ளார். படத்தில், நிழல்கள் ரவி பூணூலை அறுத்து வீசுவது போலவும், அசைவம் சாப்பிடுவதை போலவும் காட்சிகள் உள்ளன. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, இயக்குநர் செந்தூரனை சிலர் மிரட்டியதாக கூறப்படுகிறது. இதுபற்றி இயக்குநர் செந்தூரன் கூறும்போது, 'சூழ்நிலை' படம், யாருடைய மனதையும் புண்படுத்துவதற்காக எடுக்கப்படவில்லை. எந்த சமுதாயத்தை சேர்ந்தவர்களையும் இழிவுபடுத்துவது எங்கள் நோக்கம் அல்ல" என்றார்.

# டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் கர்ணன் படம்

சிவாஜி கணேசனின் இரசிகர்களுக்கும், பழைய காலப் படங்களின் பிரியர்களுக்கும் மகிழ்ச்சி அளிக்கும் விதமாக, செவாலியே சிவாஜி நடித்த கர்ணன் படம் டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் உருமாற்றம் செய்யப்பட்டு மீண்டும் திரையரங்குகளில் திரையிடப்பட உள்ளது. மார்ச் மாதம் சுமார் 50 திரையரங்குகளில் திரையிடப்பட கர்ணன் படம், அதற்காக பிரத்யேகமாக டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் ஒலி, ஒளிப் பதிவுகள் நடந்து வருகின்றன. இதன் மூலம் சிவாஜி (கர்ணன்), ராமாராவ் (கிருஷ்ணன்) என இரண்டு மிகப் பெரிய ஜாம்பவான்களின் நடிப்பை மீண்டும் பெரிய திரைகளில் இரசிக்கும் வாய்ப்பு கிடைக்கப்போகிறது. 40 இலட்சம் ரூபா செலவில் 3 ஆண்டுகள் கடுமையாக உழைத்து கர்ணன் படத்தை டிஜிட்டல் தொழில்நுட்பத்திற்கு மாற்றியுள்ளனர். இத்திரைப் படத்தின் விநியோக உரிமையைப் பெற்றுள்ள சாந்தி சொக்கலிங்கம் என்பவர், கர்ணன் திரைப்படத்தை மீண்டும் பெரிய திரைகளில் பார்க்க ஆசைப்படுகிறேன் என்று கூறினார்.



# 'வை திஸ் கொல வெறி' தனுஷை வளைக்கும் நிறுவனங்கள்

'வை திஸ் கொல வெறி' பாடலால் புகழின் உச்சத்திற்குச் சென்று விட்ட நடிகர் தனுஷை விளம்பரங்களுக்கு பயன்படுத்த பிரபல நிறுவனங்கள் போட்டி போடுவதாகக் கூறப்படுகின்றது. பிரபல நுகர்பொருள் நிறுவனமான மாரிக்கோ தனது நிறுவனப் பொருள் ஒன்றின் விளம்பர தூதராக்க அவரை அணுகியுள்ளது. மற்றொரு முன்னணி நிறுவனமான இமாமி தனது பிரபல நவரத்னா எண்ணெயை தனுஷின் '3' திரைப்படத்தில் இப்பாடல் இடம்பெறும் காட்சியில் பயன்படுத்தும் வகையில் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

நடிகர் ரஜனிகாந்தின் மகளும், தனுஷின் மனைவியுமான ஐஸ்வர்யா இயக்கும் '3' படத்தில் வை திஸ் கொல வெறி பாடல் இடம்பெறுகிறது. இது தனுஷ் தானே தயாரித்து, நடிக்கும் படம் என்பதும், படத்தில் நாயகி கமல்ஹாசனின் மகள் சுருதி ஹாசன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

'யூ டியூப்' இணையதளத்தில் இதுவரை இந்தப் பாடல் 4.20 கோடி முறை கேட்கப்பட்டுள்ளது. சுமார் 25 இலட்சம் பேர் இந்த பாடலை பதிவிறக்கம் செய்துள்ளனர். 35 இலட்சத்துக்கும் அதிகமானோர் தங்கடைய செல்பேசிகளில் இப்பாடலை அழைப்புமணியாக பதிவு செய்துள்ளனர்.

இந்நிலையில் இந்தப் பாடல் திரைப்படத்திலும் அமோக வரவேற்பைப் பெறும் என இமாமி நிறுவனம் எதிர்பார்க்கிறது. '3' படத்தில் நாயகி சுருதியிடம் நாயகன் தனுஷ் தனது காதலை வெளிப்படுத்தும் விதமாக இப்பாடல் உருவாகும் என தெரிகிறது. பாடல் அமைந்துள்ள சூழ்நிலையில் மன அழுத்தம் மற்றும் பரபரப்பைக் குறைக்கும் நவரத்னா எண்ணெய் கச்சிதமாகப் பொருந்தியுள்ளது என இமாமி நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி கிருஷ்ண மோகன் தெரிவித்தார்.



**இனியவைகூறல்** குறள்-95

**பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு**
**அணியல்ல மற்றுப் பிற.**

அடக்கமான பண்பும், இனிமையாகப் பேசும் இயல்பும் தவிர, ஒருவருக்குச் சிறந்த அணிகலன் வேறு இருக்க முடியாது.

# இளையோர் உலகம்

இளையோர்களே இது உங்களுக்கான உலகம். இங்கு உங்கள் ஆக்கங்களை, ஆரோக்கியமான விடயங்களை மற்றவர்களுடன் எழுதிப் பகிர்ந்துகொள்ளுங்கள். இது உங்களுக்கான களம்...

# எலியின் யோசனை



ஒரு பெரிய வீட்டில் ஏராளமான எலிகள் வசித்து வந்தன. அவர்களின் மகிழ்ச்சிக்கு இடையூறாய் பூனை ஒன்று அந்த வீட்டில் குடியேறியது. அன்றுமுதல் ஒவ்வொரு எலியாகப் பிடித்துத் தின்ன ஆரம்பித்தது. இது தினமும் தொடர்ந்ததால் எலிகளின் எண்ணிக்கை வேகமாகக் குறைந்து கொண்டே வந்தது. இப்படியே போனால் விரைவில் நம் இனம் முழுவதுமே அழிந்து விடும் என்று கருதிய எலிகள், அதிலிருந்து தப்பிக்க வழி கண்டுபிடிப்பதற்காக ஒன்று கூடி ஆலோசனை நடத்தின.

ஒவ்வொரு எலியும் ஒவ்வொரு ஆலோசனை சொல்லியது. ஆனால், தலைவன் எலிக்கு எந்த ஆலோசனையுமே பிடிக்கவில்லை. அப்போது இளைய எலி ஒன்று எழுந்து, "நான் ஒரு யோசனை சொல்லவா?" என்று கேட்டது. தலைவன் எலி அனுமதிக்கும் விதமாய்த் தலையை ஆட்டியது.

"பூனையின் காலில் ஒரு மணியைக் கட்டிவிடலாம். அந்தப்பூனை எங்கே போனாலும் மணிச்சத்தம் கேட்டுக்கொண்டே இருக்கும். மணிச்சத்தம் கேட்டால் நாம் ஓடிப்போய் ஒளிந்து கொள்ளலாம். இதனால் நம்முடைய இனம் பூனையிடமிருந்து பாதுகாக்கப்படும். நாமும் சந்தோசமாய் வாழலாம்" என்றது.

இந்த யோசனையைக் கேட்டதும் தலைவன் எலி உட்பட, எல்லா எலிகளும் கைதட்டி ஆராவாரித்தன. இளைய எலிக்குச் சந்தோசம் தாங்க முடியவில்லை. தன்னைச்சுற்றி அமர்ந்துள்ள மற்ற எலிகளைக் கர்வத்துடன் பார்த்தது.

அப்போது கிழட்டு எலி ஒன்று எழுந்து, "இளைய எலி சொன்ன யோசனை ரொம்ப அற்புதமாக இருந்தது. அப்படி நடந்தால் நம் அனைவருக்கும் சந்தோசம் தான். ஆனால், அந்தப் பூனையின் காலில் மணி கட்டும் வேலை இருக்கிறதே, அதை யார் செய்வது?" என்று



கேட்டது.

உடனே எலிகளின் உற்சாகமனைத்தும் ஒட்டு மொத்தமாக வடிந்தது. 'பூனைக்கு யார் மணி கட்டுவது?' என ஒவ்வொரு எலியும் மற்ற எலிகளைப் பார்த்து கேள்வி எழுப்பின. விடை தெரியாததால், இளைய எலி சொன்ன யோசனை பயனற்றுப் போனது.

கதையின் நீதி:
நல்ல யோசனையாக இருந்தாலும், அதைச் செயல்படுத்த முடியாவிட்டால் அந்த யோசனை வீண் தான்.

# புதிர்க் கேள்வி தீப்பெட்டி குச்சிகள்

தீப்பெட்டி ஒன்றில் 48 குச்சிகள் உள்ளன. சமமற்ற 3 குவியலாக அவை கொட்டப்பட்டன.

– 2 வது குவியலில் எவ்வளவு குச்சிகள் உண்டோ அதே அளவு குச்சிகள் 1 வது குவியலிலிருந்து எடுத்து 2 வது குவியலுடன் சேர்க்கப்படுகின்றது.

– 3 வது குவியலில் எவ்வளவு குச்சிகள் உண்டோ அதே அளவு குச்சிகள் 2 வது குவியலிலிருந்து எடுத்து 3 வது குவியலுடன் சேர்க்கப்படுகின்றது.

– பின்னர் 1 வது குவியலில் எவ்வளவு குச்சிகள் உண்டோ அதே அளவு குச்சிகள் 3 வது குவியலிலிருந்து எடுத்து 1 வது குவியலுடன் சேர்க்கப்பட்டவுடன் 3 குவியல்களும் சமமான எண்ணிக்கையை காட்டின.

எனவே ஆரம்பத்தில் ஒவ்வொரு குவியல்களிலும் இருந்த குச்சிகளின் எண்ணிக்கை என்ன?

விடை அடுத்த இதழில்



**சென்ற புதிர் கேள்விக்கான விடை**

படத்தைத் தலைகீழாகத் திருப்பிப் பாருங்கள்.
ஒரு நாய் தெரியும்.

# நறுமணப் பொருள்களின் தோற்றமும், வளர்ச்சியும்

கிறிஸ்து பிறப்பதற்கு 3500 ஆண்டுகளுக்கு முன்பே எகிப்தியர்கள் உணவு வகைகளுக்கு வாசனை ஊட்டுவதற்காகவும், அழகு சாதனப் பொருட்கள் தயாரிக்கவும், இறந்தவர்களின் உடலை பதப்படுத்துவதற்காகவும் பயன்படுத்தியுள்ளனர். கி.மு. 2,000 ஆண்டுக்கு முன்பே பல்வேறு நறுமண மூலிகைகள் உலகில் பயன்படுத்தப்பட்டதாக தெரி கிறது. கிறித்தவர்களின் வேத நூலான பழைய ஏற்பாட்டில் பல மூலிகை செடிகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. கி.மு. 1000-த்தில் சீனா, இந்தியா, கொரியா ஆகிய நாடுகளில் மூலிகைகளைப் பயன்படுத்தும் வைத்திய முறைகள் இருந்தன. கி.மு.200 முதல் கி.மு.800 வரையிலான காலத்தில் ரோமானியர்கள் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதியில் தலைசிறந்து விளங்கினர்.

கி.பி. 700 முதல் 1,500ம் ஆண்டு வரையிலான காலத்தில் மத்திய கிழக்கு நாடுகளுக்கான நறுமணப் பொருள்கள் ஏற்றுமதியில் வெனிஸ் குடியரசு ஏகபோக ஆதிக்கம் செலுத்தியது. கி.பி. 1492-ல் நறுமணப் பொருள்களின் தாயகமான இந்தியாவைத் தேடிப் புறப்பட்ட கொலம்பஸ், இந்தியா என்றெண்ணி முற்றிலும் புதிய பூமியான அமெரிக்காவில் கால் பதித்தார். கி.பி. 1600-1900 ஆண்டுகளுக்கிடையில் அமெரிக்கர்கள் நறுமணப் பொருள்கள் வர்த்தகத்தில் களம் இறங்கினர். 1500-1800 ஆண்டுக் காலத்தில் ஆங்கிலேயர்களும் இதில் ஈடுபட்டனர். 15ம் நூற்றாண்டிலிருந்து 17ம் நூற்றாண்டு வரையில் உலக நாடுகள் பலவும் நறுமணப் பொருள்கள் வர்த்தகத்தில் கடும் போட்டியில் ஈடுபட்டன.

# நல்லவர்களால் வாழ்கிறது உலகம்

முன்னொரு காலத்தில் ஜேர்மனியில் ஒரு யுத்தம் நடந்துகொண்டிருந்தது. நாட்டின் பல பகுதிகளிலும் ஆயிரக்கணக்கான தரைப்படை வீரர்கள் இருந்தார்கள். ஒரு நாள் படைத் தலைவர், வீரர்களிடம் சொன்னார்:

"நமக்கும் குதிரைகளுக்கும் உணவு வேண்டும். பக்கத்தில் உள்ள வயல்களிலிருந்து தானியங்களை அறுத்து எடுத்து வருவோம் வாருங்கள்!"

படைத் தலைவர் வயல் பகுதிகளை நோக்கி நடந்தார். அவருடன் சிப்பாய்களும் சென்றார்கள். சிறிது தூரம் நடந்த பிறகு ஒரு குடிசையின் கதவைத் தட்டினார் படைத் தலைவர். ஒரு முதியவர் கதவைத் திறந்தார். அவர் கால் ஊனமுற்றவராக இருந்ததால் ஊன்றுகோலின் துணையுடன் நின்றார். படைத் தலைவருக்கும் வீரர்களுக்கும் வணக்கம் தெரிவித்தார். அவரிடம் சொன்னார் படைத் தலைவர்:

"ஐயா, எங்களிடமிருந்த உணவுப் பொருட்களெல்லாம் தீர்ந்துவிட்டன. எங்களுக்கு தானியம் வேண்டும். எந்த வயலிலிருந்து எடுத்துக்கொள்ளலாம் என்று காட்டுகிறீர்களா?"

அந்த முதியவர் அவர்களை அழைத்துக்கொண்டு ஒரு மைல் தூரம் நடந்தார். சற்றுத் தூரத்தில் கதிர் முற்றிய ஒரு வயலை படைத் தலைவர் பார்த்தார். அவர் சொன்னார்:

"இந்த வயலில் உள்ள கதிர்களெல்லாம் நன்கு விளைந்திருக்கின்றன. நாம் இந்த வயலில் உள்ள கதிர்களை அறுத்துக்கொள்வோம்."

"இல்லை. இது நமக்கு வேண்டாம். இன்னும் சற்றுத் தொலைவு என்னோடு வாருங்கள்" என்றார் முதியவர்.

அவர்கள் மேலும் இரண்டு மைல் தூரம் நடந்து இன்னொரு வயலை அடைந்தார்கள். அந்த வயலிலிருந்து தேவையான அளவு தானியக் கதிர்களை எடுத்துக்கொள்ளும்படிச் சொன்னார் முதியவர். உடனே வீரர்களெல்லாம் அந்த வயலை அறுவடை செய்து மூட்டைகளாகக் கட்டி குதிரையில் ஏற்றினார்கள்.

அப்போது படைத் தலைவர் முதியவரிடம் கேட்டார்:

"எதற்காக எங்களை இவ்வளவு தூரம் அழைத்துக்கொண்டு வந்தீர்கள்? நாம் முதலில் பார்த்த வயலிலிருந்தே கதிர்களை அறுத்துக்கொண்டிருக்கலாமே!"

முதியவர் சொன்னார்: "நீங்கள் சொல்வது சரிதான் ஐயா. ஆனால் நாம் முதலில் பார்த்தது என் வயல் அல்ல. இதுதான் என் சொந்த வயல்!"

படைத் தலைவர் மிகவும் வியந்து சொன்னார்:

"ஐயா, உங்கள் நேர்மையை நான் வணங்குகிறேன். உங்களைப் போன்ற நல்லவர்கள் இருப்பதால்தான் இந்த உலகம் வாழ்கிறது..."

# இதற்கு விளக்கம் வேண்டாமே...!



ஹொண்டுராஸ்

# சிறைக்குள் பயங்கர தீ விபத்து – 357 கைதிகள் பலி

## தப்பியோடியது யார், உயிரிழந்தது யார் என்பதில் குழப்பம்



ஹொண்டுராஸ் நாட்டில் சிறைச்சாலைக்குள் ஏற்பட்ட தீ விபத்தில், கைதிகள் 357 பேர் உயிரோடு கருகிப் பலியாகியுள்ளனர். மத்திய அமெரிக்க கண்டத்தில் உள்ள ஹொண்டுராஸ் நாட்டின் தலைநகர் டெகுசிகல்பாவில் இருந்து 75 கி.மீ. தொலைவில் உள்ள கோமயாகுவா சிறையில் சுமார் 800 கைதிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த சிறையில் கடந்த 14ம் திகதி இரவு பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. அப்போது, கைதிகள் ஏராளமானோர் சிறைச்சாலைக்குள் இருந்து வெளியேற முடியாத அளவிற்குச் சிக்கிக் கொண்டனர். அவர்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்த அறை சாவிகள் அனைத்தும் அதிகாரிகள் கைகளில் இருந்தால், கைதிகளால் அங்கிருந்து வெளியேற முடியவில்லை.

சிறைக் கம்பிகளுக்குப் பின்னே அலறிக் கொண்டிருந்த பலரை சிறை அதிகாரிகள் காப்பாற்ற முயன்றுள்ளனர். ஆனால், அவர்களிடம் அதற்கான சாவி இல்லாததால் உயிரிழப்பு அதிகரித்துவிட்டது என்றனர். கோமயாகுவா தீயணைப்புத் துறை செய்தித் தொடர்பாளர் ஜோசுவா கார்சியா, தான் ஒரு நரகத்தை அதுவும் படுபயங்கரக் காட்சியைக் கண்டதாகவும், அதுவும் தீயில் இருந்து தப்புவதற்காக நடந்த களேபரத்தில் தங்கள் உடன் இருந்த சிறைக் கைதிகளையும் தள்ளிவிட்டு பெரும் குழப்பத்துக்கு இடையே அவர்கள் மீதேறித் தப்பியதாகவும் தெரிவித்தார். 'எங்களால் அவர்களைக் காப்பாற்ற முடியவில்லை. சிறை அறைகளுக்கான சாவி எங்களிடம் இல்லை. அவர்களது பாதுகாவலர்களும் உடனடியாக அழைக்கப்பட இயலவில்லை என்றார் கார்சியா,



இருப்பினும், இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சிறையின் சுவரைய தகர்த்துவிட்டு ஏராளமான கைதிகள் அங்கிருந்து தப்பி ஓடி விட்டனர். சம்பவம் பற்றி தகவல் அறிந்தவுடன் அங்கு விரைந்து சென்ற தீயணைப்பு மற்றும் மீட்பு படையினர், சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேல் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த தீ விபத்தில், சிறை முற்றிலும் எரிந்து நாசமானது. தீயில் கருகி மற்றும் மூச்சுத்திணறல் ஏற்பட்டு 357 கைதிகள் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த சம்பவத்தில் கைதிகள் ஏராளமானோருக்கு தீக்காயம் ஏற்பட்டது. அவர்கள் அனைவரும் அருகில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். பலத்த காயம் அடைந்த சுமார் 30 பேர் தலைநகர் டெகுசிகல்பாவில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிறையில் இருந்த பலரின் உடல்கள் அடையாளம் தெரியாத அளவிற்கு உருக்குலைந்து போயுள்ளது. பலர் முழுமையாக எரிந்து சாம்பராகியுள்ளனர். இதனால் உயிரிழந்த கைதிகள் யார், தப்பியோடிய கைதிகள் யார் என்பதைக் கண்டறிவதிலும் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கைதிகளுக்கு இடையே ஏற்பட்ட மோதல்தான், தீ விபத்துக்கு காரணம் என்றும், சிறைக்குள் ஏற்பட்ட மின்கசிவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டது என்றும் முரண்பட்ட தகவல்கள் வெளியானது. எனினும், தீ விபத்துக்கு உண்மையான காரணம் என்ன என்பது குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில், சிறையில் இருந்த ஒரு தண்டனை கைதிதான் இதற்கு காரணம் என்று கோமயாகுவா மாநில பெண் ஆளுநர் பவோலா காஸ்ட்ரோ தெரிவித்துள்ளார். அந்த சிறைக்கு நான் முன்பு சென்றிருந்தபோது, ஒரு கைதியுடன் பழக்கம் ஏற்பட்டது. அந்த கைதி, நள்ளிரவு நேரத்தில் எனக்கு தொலைபேசி செய்தார். மற்றொரு தண்டனை கைதி, ஆறாம் எண் கட்டத்திற்கு தீ வைப்பதாக அவர் கூறியதாக ஆளுநர் தெரிவித்தார். சிறை அதிகாரிகளும், இந்த காரணத்தை மறுக்கவில்லை. இருப்பினும், தீ விபத்துக்கான காரணம் பற்றி முழுமையான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அந்த விசாரணை நேர்மையாக நடைபெறுவதற்காக, சிறைத்துறை இயக்குநர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இத்தகவலை அதிபர் போர்பிரியோ லோபோ தெரிவித்தார். போர்க்கால அடிப்படையில் இப்பிரச்சினை அணுகப்படும் என்றும் அவர் உறுதி அளித்துள்ளார்.

இதேவேளை, சம்பவம் இடம்பெற்றதையறிந்து கைதிகளின் உறவினர்களும், நண்பர்களும் சிறைக்கு வெளியே திரண்டனர். சிறை அதிகாரிகள்தான் கைதிகளை திட்டமிட்டு கொன்றுவிட்டதாக குற்றம் சாட்டினர். சிறை அதிகாரிகள் மீது கற்களை வீசித் தாக்கினர். தங்கள் உறவினர்கள் கொல்லப்பட்டுள்ளார்களா, தப்பிச் சென்றுவிட்டார்களா என்பதை அறியமுடியாமல் திண்டாடினர். இதனால் ஒரு கட்டத்தில் அவர்கள் சிறைக்குள் அத்துமீறி நுழைய முயன்றனர். இதையடுத்து, அவர்களை கலைப்பதற்காக, காவல்துறையினர் கண்ணீர்புகை குண்டுகளை வீசினர். வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டும் கலைத்தனர்.

ஆப்கானிஸ்தான்

# முத்தரப்பு இரகசிய பேச்சுவார்த்தை தொடங்கியது

தலிபான்கள் - அமெரிக்கா - ஆப்கானிஸ்தான் இடையேயான முத்தரப்பு இரகசிய பேச்சுவார்த்தை தொடங்கி இருப்பதாக ஆப்கானிஸ்தான் அதிபர் ஹமீது கர்சாய் தெரிவித்துள்ளார். காபூலில் ஓர் அமெரிக்க பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அவர் இதை தெரிவித்தார். தலிபான்களும், ஆப்கான் மக்களும் அமைதியை விரும்புவதால், இந்த பேச்சுவார்த்தை நடந்து வருவதாகவும், முழு அளவிலான பேச்சுவார்த்தை சில மாதங்களில் நடைபெறும் என்றும் அவர் கூறினார். இரகசிய பேச்சுவார்த்தை எங்கே, எப்போது, எப்படி நடைபெறுகின்றது போன்ற தகவல்களை அவர் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

இது இவ்வாறிருக்க, அமெரிக்க நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு வரவு - செலவு தொடர்பான விவாதம் நடைபெற்றது. அப்போது, தலிபான்கள் அமெரிக்காவின் எதிரி அல்ல என்றும் துணை ஜனாதிபதி பிடன் கூறியிருப்பது பற்றி மேக் தான்பெர்ரி என்ற நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பினார். அதற்கு பதில் அளித்த பாதுகாப்புத் துறை அமைச்சர் லியோன் பானெட்டா, பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் பிராந்தியத்தில், அல்-ஹைடாதான் நமது முதல் எதிரி. அவர்களை ஆதரிக்கும் தலிபான்களும் நமது எதிரிதான். ஆப்கானிஸ்தானை மீண்டும் பாதுகாப்பான புகலிடமாக மாற்ற அவர்களை அனுமதிக்கக் கூடாது என்பதே நமது நோக்கம்' என்று கூறினார்.

சீனா

# நெருக்கடியை ஏற்படுத்திவரும் தீக்குளிப்பு

திபெத் தற்போது சீனாவின் ஆக்கிரமிப்பில் உள்ளது. எனவே, தங்களுக்கு சுதந்திரம் வழங்க வலியுறுத்தி திபெத்தியர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களை சீன அரசு அடக்கி ஒடுக்கும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. இதைத் தொடர்ந்து திபெத்தில் உள்ள புத்த மத துறவிகள் தீக்குளித்து தற்கொலை செய்யும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த போராட்டத்தில் இதுவரை 207 பேர் தங்கள் இன்னுயிரை துறந்துள்ளனர். இந்த நிலையில் குங்காய் மாகாணத்தில் உள்ள தெம்சான் பகுதியை சேர்ந்த தாம்சோ சாங்போ என்ற மேலும் ஒரு புத்த மத துறவி கடந்த வாரம் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். இவர் பாங்தாக் இவம்தார் என்ற இடத்தில் பாடசாலை ஆசிரியராக பணி புரிந்தார். திபெத்துக்கு சுதந்திரம் வழங்க கோரி சீன அரசுக்கு எதிராக இவர் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். திபெத்தில் புத்த மத துறவிகள் தீக்குளித்து தற்கொலை செய்து வருவது சீனாவுக்கு பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தி வருவதாக கூறப்படுகின்றது.



# வறுமையால் பிள்ளைகளுக்கு உணவை குறைத்த ஒரு பில்லியன் பெற்றோர்கள்!

அதிகரித்து வருகின்ற உணவு விலையால் வளர்ச்சியடைந்து வருகின்ற நாடுகளில் உள்ள சுமார் ஒரு பில்லியன் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கான உணவைக் குறைத்து வருகின்றனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு முகவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

பங்களாதேஷ், பெரு, பாகிஸ்தான் மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளில் நடத்திய ஆய்வின் முடிவிலே இத்தகவலை வெளியிட்டுள்ளது. ஆறு பெற்றோரில் ஒருவர் உணவுக்காக வேலைக்கு போவதற்காக தங்களின் பிள்ளைகள் பாடசாலைக்கு செல்வதை நிறுத்தி விடுகின்றனர் என்று அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



குழந்தைகள் இறப்பு விகிதத்தை காணப்பட்ட முன்னேற்றத்தை உணவு விலை அதிகரிப்பு மற்றும் ஊட்டச்சத்து குறைவு ஆகியன பாதிப்பதாக சிறுவர் பாதுகாப்பு முகவர் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

12 மில்லியன் குழந்தைகள் இறப்பு முன்னர் இருந்தது. அது இப்போது 7.6 மில்லியன் ஆகக் குறைந்துள்ளது. ஊட்டச்சத்துக் குறைவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் மீண்டும் இறப்பு வீதம் அதிகரிக்கும் என்று சிறுவர் பாதுகாப்பு முகவர் அமைப்பு எச்சரித்துள்ளது.

# 14 வயதில் பட்டம் முடித்த அமெரிக்கச் சிறுவன்

அமெரிக்காவைச் சேர்ந்த 14 வயதான மாணவன் மோஷே காய் கவலின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள ஒரு கல்லூரியில் சேர்ந்து, ஒரே ஆண்டில் பட்டப்படிப்பை முடித்து சாதனை படைத்துள்ளான். இதுமட்டுமல்லாமல் இளம் வயதிலேயே வி கான் டு (We can do - நம்மால் முடியும்) என்ற பெயரில் ஆங்கிலத்தில் ஒரு புத்தகம் வெளியிட்டுள்ளான். 100 பக்கங்களைக் கொண்ட அதில், மற்ற சிறுவர்களும் தன்னை போல் குறுகிய காலத்தில் சாதனை படைக்க என்ன செய்ய வேண்டும் என்று எழுதியுள்ளான்.



அறிவாற்றல் நிறைந்தவர்களை 'ஜீனியஸ்' என சொல்வார்கள்.




இந்த சிறுவனையும் அப்படித்தான் எல்லோரும் சொன்னார்கள். ஆனால், அதை அவன் ஏற்க மறுக்கிறான். கடுமையாக உழைத்தால் எல்லோருமே ஜீனியஸ் என புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளான். இதுபோல், மாணவர்கள் தொலைக்காட்சி பார்ப்பதை குறைத்து கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறான். மேலும், அவன் புத்தகத்தில் கூறியுள்ளதாவது, ஜக்கிசான் திரைப்படங்கள் என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும். ஆனாலும், ஒரு வாரத்துக்கு 4 மணி நேரம் மட்டுமே தொலைக்காட்சி பார்ப்பேன். மற்ற நேரங்களில் படிப்பில் கவனம் செலுத்துவேன். அதேநேரம் பொழுதுபோக்கு அம்சங்களிலும்தான் எனக்கு ஆர்வம் உண்டு. கால்பந்தாட்டம் எனக்கு பிடித்த விளையாட்டு. இவ்வாறு கவலின் கூறியுள்ளான்.

### அமர்தியா சென்னுக்கு அமெரிக்க சிறப்பு விருது

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நோபல் பரிசு பெற்ற பிரபல பொருளாதார மேதை அமர்தியா சென் அமெரிக்காவில் பணியாற்றி வருகிறார். அவருக்கு 1998ம் ஆண்டு பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு கிடைத்தது. அவருக்கு அமெரிக்க அரசாங்கம் 2011ம் ஆண்டுக்கான கலை மற்றும் மனித நேயத்துக்கான தேசிய விருது



வழங்கி கௌரவித்தது. அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகையில் நடந்த விழாவில் அதிபர் ஒபாமா, அமர்தியா சென்னுக்கு இந்த விருதை வழங்கி, பதக்கம் அணிவித்து, விருந்தும் அளித்து கௌரவித்தார்.

### உலகில் அதிக செலவு மிகுந்த நகரம் எது?

உலகில் அதிக செலவு மிகுந்த நகரங்கள் எவை என்பது குறித்து சர்வதேச அளவில் 130 நகரங்களில் புதிய ஆய்வு நடத்தப்பட்டது. உணவு, உடை, வீட்டு வாடகை, போக்குவரத்து, கல்வி ஆகியவற்றுக்கான செலவுப் புள்ளி விவரத்தை வைத்து இதை தீர்மானித்

*ஜேர்மனி*

## வீட்டுக் கடன் ஊழல் அதிபர் பதவி விலகினார்

வீட்டுக் கடன் ஊழல் புகாரில் சிக்கிய ஜேர்மனி அதிபர் கிறிஸ்டியன் உல்ப் கடந்த வெள்ளிக்கிழமை பதவி விலகினார். 2010ம் ஆண்டு யூன் மாதம் 30ம் திகதி ஜேர்மனியின் புதிய அதிபராக கிறிஸ்டியன் டெமாக்ரடிக் கூட்டுறவுக்



கட்சியைச் சேர்ந்த உல்ப் பதவியேற்றார். இவர் 2003 முதல் 2010 வரை லோயர் சக்சோனி மாநிலத்தின் பிரதம அமைச்சராக இருந்தார். இந்நிலையில், அவர் 2008ல் அதிகாரத்தைப் பயன்படுத்தி சலுகை வட்டியில் பல மில்லியன் ஈரோக்களை வீட்டுக் கடன் பெற்றதாக கடந்த ஆண்டு டிசம்பரில் ஒரு பத்திரிகையில் செய்தி வெளியானது. இந்த பிரச்சினை இப்போது விஸ்வரூபம் எடுத்துள்ளதையடுத்து, உல்ப் தமது பதவியை விட்டு விலகியுள்ளார். இதுதொடர்பாக, மூன்றரை நிமிடம் தொலைக்காட்சியில் உரையாற்றினார். "நாட்டின் பெரும்பான்மையான மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஒருவர்தான் இந்த பதவியில் நீடிக்க வேண்டும். ஆனால் அந்த நம்பிக்கையை நான் இழந்து விட்டேன். எனவே, அதிபர் பதவியிலிருந்து விலகுகிறேன். நான் தவறு செய்துவிட்டேன். ஆனால் எப்போதும் நான் நேர்மையானவன்" என உல்ப் தெரிவித்தார்.

*சவுதி அரேபியா*

## முதல்முறையாக நடந்த சர்வதேச ஹலால் மாநாடு

### முஸ்லீம் அல்லாத நாடுகளுக்கு இஸ்லாமிய சட்டத்தை கட்டாயமாக கடைபிடிக்குமாறு வலியுறுத்தல்

முஸ்லீம்களின் ஹலால் உணவுக்கான உலகின் முதல் சர்வதேச கலந்தாய்வு மாநாடு கடந்த செவ்வாய்க்கிழமை ரியாத் நகரில் நிறைவுற்றது. இஸ்லாமிய நாடுகளுக்கு உணவு ஏற்றுமதி செய்யும் முஸ்லீம் அல்லாத நாடுகள் இஸ்லாமிய சட்டத்தை கட்டாயமாக கடைபிடிக்க வேண்டும் என்று கோரிக்கை இங்கு வைக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை தொடங்கிய இந்த கலந்தாய்வு மாநாடு மூன்று நாள் தொடர்ந்து நடந்து செவ்வாய்க்கிழமை நிறைவுற்றது. ரியாத் ஆளுநர் இளவரசர் சத்தாம் இந்த மாநாட்டை துவக்கி வைத்து கண்காட்சியையும் திறந்து வைத்தார். இந்த மாநாடு சவுதி மன்னர் அப்துல்லாஹ்வின் ஏற்பாட்டில் உணவு மற்றும் மருந்து ஆணையத்தின் கீழ் நடைபெற்றது.



உணவு மற்றும் மருந்து ஆணையத்தின் தலைவர் முஹம்மது அல் கன்ஹல் தனது அறிக்கையில் முஸ்லிம் நாடுகளுக்கு இறைச்சி ஏற்றுமதி செய்யும் நாடுகள் இஸ்லாமிய வழி முறையில் அறுக்கப்பட்ட உணவுகளையே அனுப்ப வேண்டும் என்ற ஒரு ஒப்பந்தத்துக்கு வர வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தார். மேலும் அவர் கூறும்போது 'சில நாடுகள் மின்சார அதிர்ச்சியைக் கொடுத்து உயிரினங்களை கொல்கின்றன. இது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். சுகாதாரமான முறையில் அறுக்கப்பட்டு (ஹலால்) அந்த பொதிகளில் உரிய அடையாளங்கள் (சீல்கள்) இடப்பட வேண்டும். இத்தகைய தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகள் அனைத்தையும் உலக முஸ்லிம் லீக்குக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும்' என்ற கோரிக்கையையும் வைத்தார்.

இன்னும் இரண்டு ஆண்டுகளில் இந்த மாநாடு திரும்பவும் கூட்டப்படும். அந்நேரம் இந்தக் குழு எடுத்த நடவடிக்கைகள் மற்றும் இதனால் ஏற்பட்ட முன்னேற்றங்கள் போன்றவை அங்கு அலசப்படும் என்றும் கன்ஹல் கூறினார்.

இந்த கலந்தாய்வில் ஏழு முக்கிய பிரச்சினைகள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இது சம்பந்தமாக அறிவியல் கட்டுரைகள் 60 இந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டன. இதில் இஸ்லாம் கூறும் ஹலால் வழிமுறை, உணவுகளை பதப்படுத்துவது, உணவுகளை முறைப்படி அறுப்பது, இஸ்லாம் கூறும் ஹலால் உணவுகள் போன்ற அனைத்து அம்சங்களும் விரிவாக அலசப்பட்டன.

இதேவேளை, ஐரோப்பிய ஆணைய வர்த்தக கழகத்தைச் சேர்ந்த போலோ லுர்சியானோ 'ஏற்றுமதி நாடுகள், நுகர்வோர், வியாபாரிகள், மார்க்க அறிஞர்கள் போன்ற அனைவரின் கூட்டு முயற்சியே இந்த கோரிக்கைகளை சரியாக கொண்டு செல்ல முடியும்' என்று கூறினார்.

*லிபியா*

## கடாஃபிக்கு எதிரான போராட்டம் ஆரம்பித்து ஒருவருடம்

லிபியாவில் கேணல் முவம்மர் கடாஃபியின் ஆட்சியை வீழ்த்துவதற்கான புரட்சியின் ஆரம்பத்தின் ஓராண்டு நிறைவு கொண்டாடப்பட்டு வருகின்றது. இதனை முன்னிட்டு அங்கு பல கொண்டாட்டங்களில் லிபிய மக்கள் ஈடுபட்டார்கள்.

இதற்கான விழாக்களை கொண்டாடுவதற்காக திரிபோலி, பென்காசி மற்றும் ஏனைய நகரங்களில் வியாழனன்று மாலை முதல் மக்கள் வீதிகளில் இறங்கியுள்ளனர். இந்தக் கொண்டாட்டங்கள் வன்செயல்களாக மாறாமல் இருப்பதற்காக நகர மையங்களில் சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

புரட்சி ஆரம்பமான பென்காசியில் லிபியாவின் புதிய தலைவர்கள் ஒரு நிகழ்வில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. லிபியா தற்போது அடைந்துள்ள மாற்றங்களை கடந்த காலங்களில் தான் என்றும் கற்பனை கூடச் செய்து பார்த்தது கிடையாது என்று பிபிசியிடம் பேசிய அந்த நகர வாசி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, லிபியாவில் மீண்டும் ஒரு உள்நாட்டுப் போர் ஏற்படுவதை தடுப்பதற்காக தாம் ஒரு அரசியல் இயக்கத்தை உருவாக்கப் போவதாக லிபியாவுக்கு வெளியே இருக்கும் கேணல் கடாஃபியின் ஆட்சியின் மூத்த உறுப்பினர்கள் கூறியுள்ளனர். 'லிபியாவின் வெகுஜன தேசிய இயக்கம்' என்ற பெயரில் தாம் ஒரு இயக்கைத்தை உருவாக்குவதாக கேணல் கடாஃபியின் முன்னாள் அதிகாரி ஒருவர் பிபிசிக்கு அனுப்பிய அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

லிபியாவில் இருக்கும் தனது குடும்பத்துக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக அவர் தனது அடையாளத்தை வெளிப்படுத்தவில்லை. முன்னாள் ஆட்சிக்கு இன்னமும் சிறிது ஆதரவு லிபியாவில் இருப்பதாகவும், ஆனால், கேணல் கடாஃபி இறந்து, அவரது முக்கியமான மகனான சைவ் அல் இஸ்லாம் கைது செய்யப்பட்டிருக்கும் நிலையில், ஒரு அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்புவது என்பது மிகவும் சிரமம் என்றும் பிபிசியின் மத்திய கிழக்கு செய்தி ஆசிரியர் கூறுகிறார்.

இதேவேளை, லிபியாவிற்கு எதிராக புரட்சியை துவக்க அழைப்பு விடுத்துள்ள முன்னாள் அதிபர் முவம்மர் கடாஃபியின் மகன் ஸஅதியை ஒப்படைக்க நைஜர் நாட்டிற்கு லிபியா கோரிக்கை விடுத்துள்ளது. ஆபிரிக்க நாடான நைஜரில் வீட்டுக்காவலில் இருந்து வருகிறார் ஸஅதி. இரு நாடுகள் இடையேயான உறவு சீர்குலையாமல் இருக்க கடாஃபியின் மகன் ஸஅதியையும், கடாஃபி அரசின் தலைவர்களையும் ஒப்படைக்க வேண்டும் என லிபியாவின் தற்காலிக அரசின் செய்தி தொடர்பாளர் முஹம்மது ஹரீஸ் நைஜருக்கு கோரிக்கை விடுத்துள்ளார். கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 17ம் திகதி துவங்கிய போராட்டம் தீவிரமடைந்ததை தொடர்ந்து கடந்த செப்டம்பர் மாதம் ஸஅதியும், கடாஃபி ஆட்சியில் 30 தலைவர்களும் அண்டை நாடான நைஜருக்கு தப்பிச் சென்றனர்.

இதேவேளை, ஸஅதி மற்றும் இதர நபர்களை லிபியாவிடம் ஒப்படைக்கமாட்டோம் என நைஜரின் சட்ட அமைச்சர் மொரோயு அமாதோயு கூறியுள்ளார்.



அவுஸ்திரேலியா

# மிகப்பெரும் நிதி மோசடி

## செய்தவர் ஒரு தமிழ்ப் பெண்!



அவுஸ்திரேலியா வரலாற்றில் பெண் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரும் நிதி மோசடி ஒன்று தொடர்பாக தமிழ்ப் பெண் ஒருவருக்கு 15 வருடச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நிதி நிறுவனம் ஒன்றில் கணக்காளராக பணிபுரிந்த ரஜினா சுப்பிரமணியம் (42), தாம் பணிபுரிந்த நிறுவனத்தில் கடந்த பத்தாண்டுகளில் அந்த நிறுவனத்தின் 45 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்களை தமது கணக்கில் மாற்றிக் கொண்டு ஆடம்பரமாகச் செலவு செய்துள்ளார். அவுஸ்திரேலிய வரலாற்றில் தனி ஒரு பெண் இவ்வளவு பெரிய தொகை கையாடலில் ஈடுபட்டிருப்பது இதுவே முதல் முறை என்று கூறப்படுகிறது.

தங்க நகைகள், வைரம் மற்றும் விலையுயர்ந்த கற்கள் பதித்த நூற்றுக்கணக்கான நகைகள், புகழ்பெற்ற நிறுவனங்களின் ஆடைகள், அலங்காரப் பொருட்கள், நான்கு வீடுகள் என ஆடம்பரமாகச் செலவு செய்துள்ளார். தமது நிறுவனத்திலிருந்து தான் கையாடிய பணத்தை வைத்து ஏழு நிலையான சொத்துகளை வாங்



கியதோடு, சில நிறுவனங்களிலும் பங்குகளையும் வாங்கியுள்ள இவர், நண்பர்களுக்கு பெருமளவு தொகையை உதவியாகவும், கடனாகவும் கொடுத்துள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம் கைது செய்யப்பட்ட இப்பெண் மீது நியூ சவுத் வேல்ஸ் மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணை இடம்பெற்றது. வழக்கை விசாரித்த நீதிமன்றம், ரஜினா பேராசையால் கையாடலில் ஈடுபடவில்லை என்றும் கையாடலுக்குக் காரணம், சக ஊழியர் தந்த பாலியல் தொல்லையாலும் ஆக்ககரமான அங்கீகாரத்தை நாடியும் இந்தக் குற்றத்தைப் புரிந்துள்ளதாக கூறியது.

இந்த நோக்கங்களின் அடிப்படையில் அவர் மிதமிஞ்சிய செலவினத்தில் ஈடுபட்டதாக ரஜினாவின் சார்பாக சாட்சியம் அளித்த மருத்துவர் கூறினார். ரஜினாவிற்கான தண்டனை அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் அறிவிப்பதாக நீதிபதி அப்போது தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், நீதிமன்றம் மேற்கொண்ட தீவிர விசாரணைகளில் மேலும் பல புதிய அதிர்ச்சிகரத் தகவல்கள் கிடைத்தன. இவரது கணவன், நிதி நிறுவனத்தின் மேலதிகாரி ஆகியோர் ஒன்றாக தவறான வழியில் தொடர்புகளும் வைத்திருக்கின்றனர் என்பதை நீதிமன்றம் கண்டு கொண்டது. அதாவது, கணவனின் பங்குபற்றுதலுடன் நிறுவனத்தின் மேலதிகாரியுடன் தனது வீட்டிலும், விடுதிகளிலும் இப்பெண் பாலியல் உறவு வைத்திருந்திருக்கின்றார். அத்துடன், இவர் ஒரு நேர மதிய உணவுக்காக விடுதிகளில் பல மில்லியன் டொலர்களை செலவு செய்தும் இருக்கின்றார். விலையுயர்ந்த வாசனைத் திரவியங்களை, நகைகளை வாங்கி குவித்திருக்கின்றார் என்றும் நீதிமன்றம் அவதானித்தது. இவருக்கு எதிரான மோசடிக் குற்றம் சந்தேகத்துக்கு இடம் இன்றி நிரூபிக்கப்பட்டமையை தொடர்ந்து, நீதிமன்றம் 15 வருட கடுழிய சிறைத் தண்டனை வழங்கியுள்ளது.

ஈரான்

## போர் கப்பல்கள் மத்திய தரைக்கடலுக்குள் நுழைந்தன



இரு ஈரானிய போர்க் கப்பல்கள் எகிப்திய சுயஸ் கால்வாயூடாக மத்திய தரைக் கடலில் பிரவேசித்ததையடுத்து பிராந்தியத்தில் பதற்ற நிலை அதிகரித்துள்ளது. ஈரானின் நாசகாரிக் கப்பலான ஷஹ்த் காண்டியும் விநியோக கப்பலான கார்க்குமே மத்திய தரைக்கடல் பிராந்தியத்துக்குள் பிரவேசித்துள்ளன. ஆனால் அவற்றின் பயண இலக்கு எதுவென்பது அறியப்படவில்லை. இதற்கு முன் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் ஈரானிய போர்க் கப்பல்கள் சுயஸ் கால்வாயைக் கடந்து சென்றன.

1979ம் ஆண்டு ஈரானிய புரட்சிக்குப் பின்னர் சுயஸ் கால்வாயை ஈரானிய போர் கப்பல்கள் கடப்பது இது இரண்டாவது தடவையாகும். இந்தக் கப்பல்களின் பயணமானது பலத்தைக் காண்பிப்பதுடன் சமாதானத்துக்கான செய்தி ஒன்றாக உள்ளது என அந்நாட்டுக் கடற்படைத் தலைவர் அட்மிரல் ஹபிபுல்லாஹ் சயாரி தெரிவித்தார். ஈரானிய குடியரசின் படையினர் இஸ்லாமிய புரட்சிக்குப் பின் சுயுஸ் கால்வாயினூடாகக் கடந்து சென்றுள்ளார். இக்கப்பல்கள் பிராந்திய நாடுகளுக்கு ஈரானின் பலத்தைக் காண்பிப்பதுடன் சமாதானத்துக்கும் நட்புறவுக்குமான ஈரானின் செய்தியாகவும் உள்ளது என அவர் கூறினார். இந்தக் கப்பல்கள் ஏற்கனவே சவூதி அரேபியாவின் ஜெடாஹ் நகரில் தரித்து நின்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கப்பல்கள் சிரியா நோக்கிச் செல்வதாக நம்பப்படுவதாக சுயஸ் கால்வாய் அதிகார சபையை சேர்ந்த ஒருவரை மேற்கோள் காட்டி 'ரொய்டர்' ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான பதற்ற நிலை அதிகரித்துள்ள நிலையிலேயே மேற்படி கப்பல்களின் பயணம் இடம்பெற்றுள்ளது. இஸ்ரேல் மேற்படி கப்பல் பிரவேசத்தை சினமூட்டும் செயலெனத் தெரிவித்துள்ளது. அண்மையில் ஜோர்ஜியா, இந்தியா ஆகிய நாடுகளில் இஸ்ரேலியர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு ஈரானே காரணமென இஸ்ரேல் குற்றஞ்சாட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

ரஷ்யா

## புட்டினின் பாலுறவு கருத்து சர்ச்சையில்!

ரஷ்யாவில் சனத்தொகை வீழ்ச்சியடைவதை தடுக்க அந்நாட்டுக் குடிமக்கள் அதிகளவில் பாலியல் உறவில் ஈடுபட வேண்டும் என வலியுறுத்தியதையடுத்து அந்நாட்டு பிரதமர் விளாடிமிர் புட்டின் கடும் சர்ச்சைக்குள்ளாகியுள்ளார். ரஷ்ய ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு இடம்



பெற்ற பிரச்சார நடவடிக்கைகளின் போதே விளாடிமிர் புட்டின் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். மேலதிக குழந்தைகளின் பிறப்பை ஊக்குவிக்கும் வகையில் மூன்றாவது குழந்தையை பிரசவிக்கும் தாய்மாருக்கு பண ஊக்குவிப்புக்களை வழங்கப் போவதாக புட்டின் சூளுரைத்துள்ளார். உலகிலேயே மிகப் பெரிய நிலப்பரப்பைக் கொண்ட ரஷ்யாவின் சனத்தொகை 142 மில்லியனாகும். சிறிய நாடுகளான இது பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் சனத்தொகையை விடக் குறைவாகும். மூன்றாவது குழந்தையொன்றை இலவசக் கல்வி வசதி குறைந்த விலையில் வீடு மாதாந்தம் 140 ஸ்ரேலிங் பவுண் ஊக்குவிப்புத் தொகை என்பனவற்றை வழங்க புட்டின் இதன்போது உறுதியளித்துள்ளார்.



தனர். இதில் சுவிட்சர்லாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் உள்ள நகரங்களில் மிகவும் அதிக செலவு ஏற்படுவதாக தெரியவந்தது. இந்த பட்டியலில் சுவிட்சர்லாந்தில் உள்ள சூரிச் நகர் தான், டோக்கியோவை முந்திக் கொண்டு முதலிடத்தை பிடித்தது. கடந்த ஆண்டு சூரிச் 5வது இடத்தில் இருந்தது. முதல் 20 இடங்களில் அவுஸ்திரேலியாவை சேர்ந்த 5 நகரங்கள் இடம்பெற்றன. சிட்னி 7வது இடமும், மெல்போர்ன் 8வது இடமும் பெறுகிறது.

தென் அமெரிக்க நாடுகளில் கனடாவில் உள்ள வான்கவர் நகரம், அமெரிக்க நகரங்களை விஞ்சி 37வது இடம்பெற்றது. அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ், சீனாவின் சாங்காய் ஆகியவை 42வது இடத்தையும்; நியூயோர்க் 47வது இடமும் பெற்றிருக்கின்றன. ஆசிய நாடுகளில் சிங்கப்பூர் ஒரு இடம் முன்னேறி 9வது இடத்திலும், தென் கொரியா சியோல் 9 இடம் உயர்ந்து 27வது இடத்திலும் உள்ளன. இந்திய துணை கண்டத்தில் மிகவும் செலவு குறைந்த நகரங்கள் பட்டியலில் இந்தியாவில் உள்ள டில்லி, மும்பை நகரங்களும், பாகிஸ்தானில் உள்ள கராச்சியும் இடம்பெற்றுள்ளன.

## 16 இந்தியர்கள் பிரித்தானியாவில் கைது

பிரித்தானியாவில் அனுமதியின்றி தங்கி இருப்பவர்களை பிடிக்க அந்நாட்டு குடியேற்றத்துறை அதிகாரிகள் நாடு முழுவதும் அதிரடி சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாவதற்கு முன்பாக சட்டவிரோத



மாக இருப்பவர்களை கண்டுபிடிக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இந்த நடவடிக்கையின் போது 16 இந்தியர்கள் கைதாகியுள்ளனர். இதில், பஞ்சாபைச் சேர்ந்த பாங்க்ரா பாடகர் கேர்ரி சந்து (29) என்பவரும் அடங்கியுள்ளார். பல ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்ட அவர், மீண்டும் பிரித்தானியாவிற்குள் நுழைந்துள்ளார். காப்புறுதி இல்லாத வாகனத்தை செலுத்திவந்தபோது அவர் பிடிபட்டார். மேலும், பிரித்தானியாவில் தங்குவதற்காக போலித் திருமணங்களை செய்து கொண்ட 6 இந்தியர்களும், கடைகளில் அனுமதியின்றி பணியாற்றி வந்த 9 இந்தியர்களும் கைது செய்யப்பட்டனர்.



# Mohan Jewellery Mart



பழைய நகைகளைக் கொடுத்து
புதிய நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்

3/4 Fois sans Frais
(Piéce d'identité + Rib + C.B)

201,rue du fg. St. Denis 75010 Paris
Tel: 01 42 05 65 26 Fax: 09 50 31 01 82
Mo: La Chapelle / Gare du Nord

## ஒரே தடவையில் தீர்த்துக் கொள்ளுங்கள்!

உணவகங்கள் – கடைகள் – தொழிற்சாலைகள் போன்றவற்றில்



- எலிகள் – சுண்டெலிகள்
- கரப்பான் பூச்சிகள்
- தொல்லைகொடுக்கும் பூச்சிகள்

DIAPHANECONCEPT
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
N° de certificat 10KX50000-4107

Tél.: 01 76 58 42 07
Fax: 01 48 59 09 95

அனைத்திற்கும் சிறந்தவல்லுனர்கள் மூலம்
ஒரே தடவையில்
பயன்பெற்றிட நாடுங்கள்
77 bis rue Robespierre
93100 Montreuil
சுதா / விமல் : 06 34 18 80 04

## வன்னி இறைச்சிக்கடை





M°: La Courneuve
Tram T1 - Arét : Danton

105, Avenue Jean Jaurés
93120 La Courneuve
Tél : 01 48 37 20 89

## உங்கள் தேவைகள் எங்கள் சேவைகள்

We&You
Event management
Group Foto Elanges



- புகைப்படம்
- வீடியோ
- மணவறை
- மண்டப அலங்காரம்
- மணப்பெண் அலங்காரம்
- விழாக்களுக்கான உணவு சேவை
- விழாக்களுக்கான உடைகள்

www.fotoelanges.com

01 43 83 95 26 - 06 45 83 90 64

## Délices De L'INDE

DRANCYஇல் புதிய உதயம்

அனைத்துவகையான சைவ உணவுவகைகளையும், பலகார வகைகளையும் அனுபவம் வாய்ந்த சமையலாளர்களால் சுத்தமாக தயாரித்து வழங்குகிறோம்.

விழாக்கள் கொண்டாட்டங்களுக்கு தேவையான பலகார வகைகளையும், உணவு வகைகளையும் குறிப்பிட்ட நேரத்தில் விநியோகம் செய்கிறோம்



220 rue Anatole France,
93700 Drancy. Tél : 01 57 42 48 16

## ESOL with Citizenship

விரைவாக நிரந்தர
வதிவிட உரிமை பெறவேண்டுமா???

ESOL வகுப்புகள் உங்கள் நிரந்தர
வதிவிட உரிமைக்கு வழிவகுக்கின்றது.



ஒரே கட்டணத்தில் சித்தியடையும்
வரை பயிற்சியளிக்கப்படும்

Special Offer!

சித்தியடைவது கடினமா????? தயாராகுங்கள்...

- தனிநபர் கவனிப்பு
- தேர்ச்சிபெற்ற ஆசிரியர்கள்
- குறைந்த கட்டணத்தில் மிகுந்த சேவை

Exam Preparation Classes
£175 Only

Food Hygiene Seminar

Personal Licence (Off Licence)

English Classes £88 Per month
★ Speaking & Listening ★ Reading & Writing

IELTS Exam Preparation

For more information call:
020 8903 9580
Hazel House, 1-3 Lancelot Road, Wembley HA0 2AL